REGD. M. 4048

திராவிட நாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7	5—9—48	இதழ் 12

27—8—48-ல்
சிறையில் இருந்து வெளிவந்த பெரியாரும் தோழர்களும்

இந்தி எதிர்ப்பு இயக்கத்தை மதிக்கமாட்டோம், பிரமாதப்படுத்த மாட்டோம், கைது செய்வது போன்ற நடவடிக்கைகளை எடுக்க மாட்டோம் என்று ஆளவந்தார்கள் வீம்பு பேசினர்—ஆனால் நடந்த தென்ன?

தமிழருக்கு தேவையில்லை

இந்தி எதிர்ப்பாளர்கள், யார் தெரியுமோ? சூனாமானாக்கள்தான்— வேறு யாருமில்லை—என்று, கூறித் திருப்தியைத் தருவித்துக் கொள்ளும் திருப்பிரயாணங்களுக்கு, ஒரு வார்த்தை — சூனாமானாக்கள்தான், ஆட்சிப் பீடம் ஏறியுள்ள பழைமை விரும்பிகளின் சுபாவத்தையும், திறமையையும், நன்கு அறிந்தவர்கள்— எனவே, வேறு பலருடைய கண்களுக்கு முதலில், தெளிவாகத் தெரியாத பல விஷயங்களை, அவர்கள் கண்டறிய முடிகிறது. இந்தி விஷயத்திலும் அப்படித்தான். இந்தியை ஏன் இந்தஆட்சியாளர்கள், பிடிவாதமாகப் புகுத்துகிறார்கள் — உட்பொருள் என்ன, என்பதைச் சுயமரியாதைக்காரர்கள்தான் கண்டறிந்தனர்—சூட்சமத்தை எடுத்துரைத்தனர். ஆனால், அவர்கள் மட்டுமேதான் இந்திஎதிர்ப்பாளர்கள், என்று கூறுவது அசட்டுத்தனம்—நம்புவது பைத்யக்காரத்தனம். சூட்சமத்தைக் கண்டறிந்து ஆளவந்தார்களின் அந்தரங்க நோக்கத்தை அம்பலப்படுத்தியவர்கள் அவர்கள், என்றபோதிலும், இந்தி கூடாது, ஆகாது, என்பதற்கான காரணங்களை,ஏற்றுக் கொண்டவர்கள், சுயமரியாதைக் கட்சியினர் மட்டுமல்ல — பொது மக்கள் — குறிப்பிடத்தக்க அளவுள்ள காங்கிரஸ்காரர்கள்—தமிழரசுக் கட்சியினர் - தமிழ்ப் புலவர்கள், ஆகியோரும், இந்தி கூடாது, என்பதை உணர்ந்து, உரைக்கின்றனர். ஊராரின் உள்ளத்தை அறிய முடியாத உப்பளத்தார் (சர்தார் வேதரத்தனம்) எண்ணுவதுபோல, இந்தியை எதிர்ப்பவர்கள சூனாமானாக்கள் மட்டுந்தான், என்று எண்ணிவிட வேண்டாம்,—இந்தி எதிர்ப்பு, பல்வேறு முனைகளிலிருந்தும கிளம்பியவண்ணம் இருக்கிறது—அவையாவும் ஒன்றுகூடி,ஒருருக்கொள்ளும் நாளும் அதிக தூரத்தில் இல்லை. இன்று, இந்திஎதிர்ப்புக்காக நேரடி நடவடிக்கை எடுத்துள்ள திராவிடர் கழகத்தவரின் இரத்தம், அடக்குமுறைக் கொடுமையினால், கீழே சிந்தச் சிந்த, இந்த கூட்டு எதிர்ப்பு முன்னணியின், உருவம் வளரப் போகிறது.

மாணவர்களின் நலன் எதுவென்பதை அறிந்து பணியாற்றும் 'ஆரம்பக் கல்வி' எனும் இதழ் சூனாமானா ஏடு அல்ல, அந்த ஏடு இந்தி, தமிழர்களுக்குத் தேவையில்லை, என்று கூறுகிறது.

அரசியல் கிளர்ச்சி என்றோ, பதவி பறிக்கும் தந்திரம் என்றோ, கல்விப்பிரச்னைகளைக கருத்தூன்றிக் கவனிக்கும் ஒரு இதழின் கருத்துரையைக் கூறிவிட முடியாது. எனவே, காங்கிரஸ் சூத்ரதாரிகளின் தூபத்தில் மயங்கி, இந்தி எதிர்ப்பு ஆத்தமற்றது. யாரோ சிலருடைய சுயநலக் கூச்சல் என்றெல்லாம், எண்ணிக் கொண்டுள்ள, காங்கிரஸ் அன்பர்கள் ஆரம்பக்கல்வி, ஜூலை மாத இதழில் உள்ள, தமிழர்களுக்குத் தேவையில்லை என்ற கட்டுரையைச் சற்று அக்கரையுடன் படித்திடக்கோருகிறோம். அவர்களின் நலனுக்காக, மேற்படி கட்டுரையை இங்கு, வெளியிடுகிறோம்.

"இன்று நமது திராவிட நாட்டில் உள்ள பள்ளிகளிலெல்லாம் இந்தி கட்டாய பாடமாக நுழைக்கப்பட்டு வருவது குறித்து எங்கு பார்த்தாலும் ஒரே எதிர்ப்புக் கிளம்பியுள்ளன என்பதை அறிவோம். நமக்கும் தினம் தினம் கடிதங்கள் வந்து குவிந்துகொண்டே இருக்கின்றன. நாம் அவைகளுக்கெல்லாம் தனித்தனியே பதில் சொல்வதைவிட இக்கட்டுரை அவர்களுக்குப் பயன்படும் என்று நினைக்கிறோம்."

நம்மை நமது ஆசிரியர்கள் பலவிதமான கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அதாவது, இந்திமொழியை ஏன் கட்டாயமாக்கியுள்ளார்கள்? இந்திமொழியினால் நம்நாடு சீர்கேடு நீங்கி சிறப்பெய்திவிடுமா? உலகப் பொதுமொழியாகிய, ஆங்கிலத்தில் இருக்கும், அல்லது இல்லாத விஞ்ஞான அறிவு நம மக்களுக்கு இந்த இந்தி மொழி கற்பதனால் வந்து விடுமா? எங்கோ ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த இந்த இந்தியை நம் தமிழ்நாட்டில் வைத்து, நம கண்ணிமையால் காத்துவந்த தமிழ் மொழியை இருக்குமிடந் தெரியாமல செய்யப்படும்-தமிழர்களை வடநாட்டவர்களின் அடிமைகளாக்க வேண்டிச் செய்யப்படும் சூழ்ச்சிகளை ஏன் நமது தமிழ்-திராவிட-இன மந்திரிகள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்? என்பன போன்ற இன்னும் பலவித ஐயங் கலந்த கேள்விகளை நம் பார்வைக்கு வாசகர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆகவே இவைகளுக்கு நாம் சுருக்கமாகப் பதில்சொல்லவேண்டுமானால், ஆங்கிலப் பழமொழி ஒன்று நமது நினைவிற்கு வருகிறது.

அதாவது "ஒரு நாட்டை நீ அடையவேண்டுமானால் முதலில் அந்நாட்டு மொழியைக் கொல்லு" என்பதாகும். இப்படிப்பார்க்குங்கால் மேற்படி இந்தி மொழி புகுதல, வடநாட்டு ஆதிக்கம் புகுதல என்றுதான் அர்த்தம். ஆகவே இது ஒரு அரசியல் பிரச்னைதானே தவிர,நம் நாட்டுக்கல்வி முன்னேற்றத்துக்குச் செய்யப்படும் நற்றொண்டு என்று எவரும் எண்ணிவிடக் கூடாது.

நம் திராவிட- தமிழ் நாட்டில் நூற்றுக்கு 80பேர்கள் இன்னும் ஆரம்பக்கல்வியே அறியாதவர்களாக இருக்கிறார்கள். அதைக் களைந்து நூற்றுக்கு நூறு பேர்களும் கற்றவர்களாக ஆக்குவதன்றோ கல்விமுன்னேற்றத்துக்குச் செய்யப்படும் நற்றொண்டும், இன்று மிக மிக இன்றியமையாததுமாகும். ஆகவே அதை விடுத்து 150 ஆ[illegible]ளாக ஆங்கிலேயனிடம் அடிமை[illegible]டு முன்னேற்றத்திற்கு வழியில்லாமல படு குழியில் தள்ளப்பட்டுக் கிடந்த நம் நாட்டு மக்களை, சுதந்திரம் வந்த பிறகாவது கரையேற்ற வேண்டாமா? கரையேற்றுவதற்குப் பதிலாக ஆங்கிலேய ஆட்சிப்படுகுழியில 150 ஆண்டுகள் வதைந்தீர்கள், இப்பொழுது சுதந்திரம் வந்துவிட்டது. ஆகவே எல்லேரும் பதிய படுகுழியான வடநாட்டுப் பாழும் படு குழியில் ஒரு 150 ஆண்டுகளுக்கோ, அதற்குமேலோ விழுந்து கிடவுங்கள் என்று சொல்லாமல் சொல்வது போன்றல்லவோ வுள்ளன இப் பிரச்னை?

"அரசாங்க உத்தியோகத்திற்கு இந்தி மொழியும் ஒரு தகுதியாகக் கருதப்படும்" என்ற கனம் கல்வி மந்திரியாரின் பேச்சு மிக விந்தையாக இருக்கிறது. அப்படியானால் இவர்கள் பிரதேச மொழியைப் புறக்கணித்து, இந்தி மொழியிலேயே தங்களது நகல்களைப் பதிவு செய்யப் போகிறார்களா? என்று கேட்கிறோம். அப்படியில்லையாயின் பின் சென்னை மாகாணத்தவருக்கு இந்தி கற்க வேண்டிய அவசியமென்ன? என்பதுதான்நம்கேள்வி."

oooooo

வரலாற்றில் இடம் பெறும் வைபவம்

[C. N. A.]

மகா மேதாவிகளும்—காந்திய வாதிகளும்—பொதுஜனத் தலைவர்களும் — எதிர்ப்புக்களை எல்லாம் எளனத்தாலேயே சாகடித்துவிடக் கூடிய சக்தி வாய்ந்தவர்களும் கொண்ட இந்த மாகாண மந்திரிசபை, தோதலுக்கு நிற்காத 'தேவநாதனுக்ரகத்துக்கு பாத்திரமாகாத', பொதுமக்களிடம் இச்சகம் பேசியாவது இருதயத்தை அபகரித்துவிட வேண்டும் என்ற அரசியல் இலாப வேட்டை முறையை விரும்பாத, திராவிடர் கழகத்தின், நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடுவதைப் பற்றி கவனம் செலுத்தும், என்று யார் எண்ணியிருக்க முடியும்!

கலியுக ஜனகர் என்று புகழ் பெற்ற ஓமந்தூராருக்கு எவ்வளவோ, மிகமிக முக்கியமான அலுவல்கள் உள்ளன.

ஆங்கிலத்தில் தயாரிக்கப்படும் ஆட்சி மன்ற ஏடுகளைத் தமிழாக்கித் தரச் சொல்லவும், தரப்பட்டவை சரியா என்றுகேட்டறியவும், கேட்டறிந்தது சரியா என்று மேற்கொண்டறியவும், அறிந்ததைப் புரிந்து கொள்ளவும், புரிந்துகொண்டதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கவுமான அலுவல் மட்டுமல்ல நான் குறிப்பிடுவது.

ஆகாது இந்த ஆளின் ஆட்சி! இந்த ஆட்சியினால் நமது அபிலாஷைகள் சித்தியாகாது—நம்மளவாளுடைய க்ஷேம பிவிருத்தியிலே லவலேசமும் அக்கரை கொள்ளாத இந்த ஆசாமியைச் சீக்கிரத்திலேயே வெளியேற்றிவிட்டு, விப்ரபந்துவான சுப்பராயனையோ, விசேஷதீட்சண்யமில்லாவிட்டாலும், அபிமானம் நிறைந்த பக்தவத்சலத்தையோ, வேறுயாரையோ பீடமேறச்செய்து, நமது காரியத்தைக் கவனித்துக் கொள்ளவேண்டும்—என்று, யோசித்தபடி உள்ள, வரதாச்சாரி கம்பெனியின் 'போக்குவரத்துக்களை'க் கூர்ந்து கவனித்து, அவ்வப்போது அரசியல் ஆருடம் பார்த்தபடி, ஏற்படும் பிளவுகளைச் சரிபடுத்த 'ஆசை அணைகள்' கட்டுவதையும், மட்டுமல்ல நான் குறிப்பிடுவது—முதலமைச்சர் ஓமந்தூராருக்குப் பலப்பல அலுவல்கள் உள்ளன—நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த, நினைத்தது நினைத்தபடி ஏன் நடைபெறவில்லை, என்பதைக் கண்டறிய, நிஜாமின் போக்குக்குத் தக்கபடியான, முன்னேற்பாடுகளைச் செய்ய, பணப் பெருக்கமும் உற்பத்திக் குறைவும், ஒழிய என்ன செய்வது என்று கண்டறிய, பருவமழை பெய்யாத காரணம், பாவம் அதிகரித்ததால் என்று கூறிவிட்டோம், ஆனால் அது போதுமா, பாவம் குறையவும் புண்யம் அதிகரிக்கவும் ஏதேனும் செய்ய வேண்டுமே, அதற்கென்ன வழி, என்று கண்டறிய, கள்ளுக் கடைகளை மூடிவிட்டோமே ஒழிய, கள் வாடைமட்டும் அடங்கக்காணோமே, இதற்கென்ன செய்வது என்று யோசிக்க, இவ்விதமான பலப்பல அலுவல்கள் உள்ளனவே, இவ்வளவுக்கும் இடையே, ஓமந்தூரார் திராவிடர் கழகத்தின் நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்தைப் பற்றி, என்னவோ, கவனிக்கவோ, நேரமோ — அவசியமோ, இருக்கமுடியாது—அவ்வளவு பெரியவர் இவ்வளவு சிறிய விவகாரத்தையா கவனிக்க இசைவார்—அவருடைய வீரதீர பராக்கிரமத்தை, நிஜாமை அதிர்க்க, பஞ்சத்தை எதிர்க்க, இலஞ்சத்தை ஒழிக்க, நாட்டைச் சீராக்க, ஆட்சியைப்புது முறையாக்க, இப்படிப்பட்ட காரியங்களுக்கல்லவா பயன்படுத்துவார். சட்ட சபையை எட்டியும் பாராத, சாமான்யர்களின் கமிட்டிக் கூட்டத்தின் மீது அவருடைய திருப்பார்வை ஏன் பாயப்போகிறது, என்று தான் நான் நினைத்தேன்—நான் மட்டுமா—நாடாளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் பலரும் நினைத்தனர். ஆனால் நடந்தது என்ன? நாடாளும் கட்சியின் நண்பர்களே, வெட்கித் தலை குனிய வேண்டிய முறையிலே, காரியங்கள் நடைபெற்றன — மின்சார வேகத்தில் — நடைபெற்றுக்கொண்டுள்ளன! என்னென்ன இனியும் நடைபெறுமோ, யார் கண்டார்கள்!

அரசியல் வாண வேடிக்கை!
நாலுநாள் கூத்து!
தன்னாலே நசித்துவிடும்!
காட்டேக் கூச்சல்!
கலைக்கு உதவாதது!
கவலைப்படவே வேண்டாம்
கரைந்துவிடும்!
புசுபுசுவென்று போய்விடும்!

என்றெல்லாம், எந்த இந்தி எதிர்ப்பைப் பற்றி, மாறி மாறி மந்திரிமார்கள் பேசிவந்தார்களோ, மக்கள் மன்றத்திலே மார்தட்டிக் கூறினார்களோ மமதையுடன், இன்னும் நாலு நாட்களிலே இருக்குமிடம் தெரியாது, இந்தி எதிர்ப்புப் போய்விடத்தான் போகிறது பாரீர் என்று பேசினார்களோ, அந்த இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாக, திராவிடர் கழகநிர்வாகக்கமிட்டி, மேற்கொண்டு என்னென்ன செய்வது என்று யோசிக்கக் கூடிற்று. கூடிய கமிட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கையில், மாகாண சர்க்காரின், போலீஸ்படையும் ஜரூராக வேலைசெய்த வண்ணம் இருந்ததைப் பிறகே அறிய முடிந்தது.

கமிட்டி கூடியிருந்த பெரியார் மாளிகை உள்ள தெருவைச் சுற்றியும், போலீஸ் வளைத்துக்கொண்டிருப்பதையோ, கழகத்தினரைக் கைதுசெய்துகொண்டு செல்ல, தயாராகப் போலீஸ் லாரிகள் வந்திருப்பதையோ, கமிஷனரும் அவருடைய துணைவர்களும், அப்பக்கம் பவனி வருவதையோ, எதிர்பாராத கமிட்டியினர், எங்கள் ஊருக்கு வரவேண்டும்—எங்கள் ஜில்லாவில் மாநாடு நடத்த வேண்டும் — எங்கள் ஊரில் மறியல் துவக்க அனுமதி தரவேண்டும்—என்று கேட்டுக்கொண்டிருந்த வெளியூர்ப் பிரமுகர்களுக்குத் தக்க சமாதானங்களைக் கூறிக்கொண்டும், தகுதியான திட்டங்களைப் பற்றிக் கலந்து பேசிக்கொண்டும் இருந்தனர்—அதேபோது தான் போலும், நாலு அடிக்கு ஒருவர் நிற்கட்டும்—ஆறு லாரிகளை அனுப்பிவைப்போம், அசிஸ்டெண்ட் கமிஷனர் போகட்டும்—ஆசாமிகளை அப்படியே சுற்றி வளைத்துக் கொள்ளவேண்டும்—எல்லோரையும் ஒரே அடியாக பிடித்து மூடிவிடவேண்டும், என்றெல்லாம், கமிஷனர், தமது அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்தது! புசுபுசு

வென்று போய்விடப்போவது இந்த இயக்கம் என்று, பல இயக்கங்களை நடத்திப் பழக்கப்பட்ட தலைவர்கள் பேசிவிட்டார்களே, அப்படிப்பட்ட 'ஞானஸ்தாள்' அவ்வளவு தெளிவாகப் பேசி, இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அலட்சியமாகக் கருதிவிட்ட பிறகு, போலீஸ்பாராவோ, லாரியோ, கமிஷனரின் உத்தரவோ, கைது ஆவதோ வரக்கூடுமென்று, ஏன் கழகத்தினர் எண்ணப் போகிறார்கள்! கழகம், மிகமிக ஏமாற்றத்துக்குள்ளாயிற்று, அன்றைய நடவடிக்கையால்! அசகாய சூரர்கள் இந்த ஆளவந்தார்கள் என்று எண்ணிக்கொண்ட கழகத்தவருக்கு, அன்றுதான் விளங்கிற்று, அந்த அசகாய சூரர்களுக்கு, "அல்லியில் ஜுரம்" எவ்வளவு வேகமாக அடித்துக்கொண்டிருந்தது என்பது. பெரியதோர் ஏமாற்றம்! அதிர்ச்சி என்றே கூறலாம்! புசுபுசு வென்று போய் விடும் என்று கூறிய மந்திரிமார்கள், இவ்வளவு ஜரூராக வேலை செய்ய முனைவார்கள், என்று எப்படி யார் தான் எண்ணியிருக்க முடியும்!

கழகத்தவர் கொண்ட அதிர்ச்சியைவிட, ஏமாற்றத்தைவிட, அதிகமான அளவு, ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும் — இல்லை என்றால், மிகமிகக் கவலையற்ற முறையிலும், கெம்பீரத் தொனியிலும் பேசிவந்தவர்கள், திடீரென, 'ஜல்லடம்' கட்டிக்கொண்டு கிளம்பியிருக்க மாட்டார்களல்லவா! பாபம்! அவர்கள் பட்ட கஷ்டத்தை யார் கவனிக்கிறார்கள்! கொஞ்சம் கவனித்தால் விளங்கும் அவர்களின் மனவேதனை!! குறிப்பாகவும் சிறப்பாகவும் ஓமந்தூராரின் மனவேதனை மிகமிக அதிகமாகவே இருந்திருக்க வேண்டும்!

இந்தி எதிர்ப்பு இயக்கம் துவக்கப்பட்டதும், தாங்கள் அதனை மதிக்கப் போவதில்லை, பிரமாதப்படுத்தப் போவதில்லை, கைது செய்வது போன்ற நடவடிக்கைகளைச் செய்யப் போவதில்லை, என்று ஆளவந்தார்கள் வீம்பு பேசினர்.

கருணை—நீதி—ஜனநாயகம் போன்ற கோட்பாடுகளைக் காரணம் காட்டியல்ல! இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் மீது கவனஞ்செலுத்துவதே, அந்தக் கனவான்களின் கண்ணியத்துக்குக் குறைவு ஏற்படுத்திவிடும் என்றும், இந்தி எதிர்ப்பாளர்களைக் கைது செய்தால், அதன் விளைவாக அவர்களும் இயக்கமும் நாட்டு மக்களின் கவனத்துக்குரியதாகிவிடும் என்றும் அந்த நிலையைத் தாங்கள் உண்டாக்கப் போவதில்லை என்றும், ஒருநடவடிக்கையும் எடுக்காமலேயே இருந்துவிட்டால், கேட்பாரற்று, கவனிப்பாரற்று, சிந்துவாரற்று இயக்கம் செத்துவிடும் என்றும், இப்படிக் காரணம் காட்டிப்பேசினர் கனம்கள்! இதழ்கள், இதே ராகத்தைப் பாடின!

"ஆச்சாரியாரைவிட ஓமந்தூரார் புத்திசாலி, சார்! இந்தி எதிர்ப்பாளர்களை முன்பு ஆச்சாரியார் கைது செய்ததாலேதான் இயக்கம் வளர்ந்தது. இந்தச் சூட்சமத்தை அறிந்து, ஓமந்தூரார் ஓர் யுக்தி செய்திருக்கிறார். இந்தி வேண்டாம் என்று இவர்கள் கத்து கத்தென்று கத்தட்டும் என்று விட்டுவிட்டார்-கைது செய்வதில்லை என்று கூறிவிட்டார். இனி இயக்கம் வளராது,—என்று, ஓமந்தூராரை அவருடைய சகாக்கள் பாராட்டினர்.

இந்தி எதிர்ப்பு, இவர்கள் எண்ணியதைப் போல, கவனிப்பாரற்றுப் போயிற்று! இல்லை! மாறாக, வளர்ந்த வண்ணம் இருந்தது.

முதல்நாள் மறியலின் போது, பொதுமக்களும் மாணவர்களும், மறியல் தொண்டர்கள் கைது செய்யப்படுவார்கள், பார்க்கலாம், என்ற முறையிலேதான் கூடினர்.

தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருந்தால், பிறகு ஒவ்வொரு நாளும், அங்கு பொது மக்களுக்கும் போலீசுக்கும் ஒரு கால்மணி நேர வேலைதான் இருக்கும் — இயக்கத்தைப் பற்றியும் கழகத்தைக் குறித்தும் பொதுமக்களின் கவனமும் பேச்சும் சிலநிமிஷ நேரம் மட்டுமே இருந்திருக்கும்.

தொண்டர்கள் வந்தனர்—இந்தி ஒழிக என்றனர் — போலீஸ் லாரி வந்தது— ஏற்றிவிட்டனர்—மறியல் முடிந்துவிட்டது—என்று இவ்வளவோடு முடிந்துவிட்டிருக்கும்.

புசுபுசுவென்று இயக்கம் போய் விடவேண்டும் என்ற நோக்கம் கொண்ட மகா மேதாவிகள் செய்த புத்தி தீட்சணியமிகுந்த காரியம், இப்படி இயக்கம் ஒருநாள், ஒரு பொழுது, ஒருபத்துபதினைந்துநிமிஷ விளையாட்டாகிவிடும் நிலையிலே சிக்கிக் கொள்ளாதபடி தடுத்ததுடன், உண்மையான, உருவான, பலன் தரத்தக்க, பிரசார பலம் பொருந்திய வகையான மறியல் திட்டமாகமாற்றி அமைத்துவிட்டது. இரண்டுமணிநேர அளவுக்கு மறியல்! பள்ளி செல்லும் மாணவர்கள் அனைவரையும் காணவும், பணிவும் அன்பும் கலந்த குரலிலும் முறையிலும், இந்திவேண்டாம் என்று தொண்டர்கள் கூறவும், பிறகு கலையவும், அன்று முழுவதும் மக்கள், மறியல்பற்றிப் பேசவும், மறியலை நடத்தும் கழகத்தின் கொள்கைகளைப்பற்றி விவாதித்து விளக்கம் பெறவும், வசதி ஏற்பட்டது. இந்த உண்மையைச் சர்க்கார் மட்டுமல்ல, நமது கழகத்தவரில் பலரும் உணரச் சிலநாள் பிடித்தது. பொதுவாகவே, திடீர் நடவடிக்கைகளிலும் மயிர்கூச்செறியும் சம்பவங்களிலுமே பொது மக்களுக்குப் பிரியம்—நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இயக்கங்களுக்கும் இதே மனோபாவந்தான் பொதுவாக உண்டு. ஆனால் திராவிடர் கழகத்தாரின் திட்டத்தைத் தமது தந்திரத்தால் தகர்ப்பதாக எண்ணிக்கொண்ட ஆளவந்தார்கள் கையாண்ட புதுமுறை, உண்மையாகவே, பொது மக்களுக்கும், திராவிடர் கழகத்துக்கும், புதியதோர் உண்மையை விளக்க உதவிற்று— உடனடியாகக் கைதுசெய்யப்பட்டுக் கூண்டில் அடைத்துவிடும் முறையினாலே ஏற்படும் பலனைவிட, மறியல் நெடுநேரமும் தொடர்ந்தும் நடைபெற வழி கிடைப்பதனால் உண்டாகும் பலன் அளவிலேமட்டுமல்ல, தரத்திலும் பெரியது என்பது விளக்கமாகத் தெரியலாயிற்று.

இதுவரை நடைபெற்ற எந்த மறியலும், இந்தி எதிர்ப்பு மறியலின் போது காணப்படுவது போன்ற நீண்டநேரப் பணியினைக் கண்டிருக்கமுடியாது. இந்தமறியல் பொது மக்கள் மனதிலும் மாணவர்கள் மனதிலும் ஆழப்பதிவதுபோல, வேறு மறியல்கள், பதிந்ததில்லை.

உடனடியாகக் கைது செய்து விடட்டும், என்ற நோக்கத்துடனேயே காங்கிரஸ் நண்பர்கள் முன்பெல்லாம், பலவகை மறியல்களை நடத்தினர் — காரணம், அவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைவாசமுத்திரை பெற்று, பிறகு அந்த முத்திரையைப் பொதுமக்களிடம் காட்டி தேர்தலில் பலன் பெறவேண்டுமென

(13-ம் பக்கம் பார்க்க)

இந்த மந்திரிமார்கள் ஆட்சியில்

—●—

இந்தி எதிர்ப்பு என்பது வெறும் அரசியல் கிளர்ச்சி, என்று கூறி, மொழி, கலாச்சாரப் பிரச்னைகளை மூடிவிட முயலுகிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள்.

அரசியல் பிரச்னைகளிலே, இவர்களின் ஆட்சி, ஏதோ தப்பு அழுக்கின்றி மக்களின் நலனை நிறைவேற்றி வருவதுபோலவும், ஆகவே, அரசியல் பிரச்னைகளில் குற்றம் குறை கண்டுபிடிக்க முடியாமல், திராவிடர் கழகம் திண்டாடி, எதையாவது இட்டுக் கட்டியாவது இவர்களுக்கு இழுக்குக் கற்பிக்க வேண்டுமென்ற கருத்துடன், இந்தி எதிர்ப்பைத் துவக்கி இருக்கிறார்கள் என்றும் மக்கள் மனதிலே விஷவித்துத் தூவுகிறார்கள்.

அரசியல் நடவடிக்கைகளில், இதுவரை இந்த ஆளவந்தார்கள் செய்த காரியம் அவ்வளவும், 'ஆயிரத்தெட்டு சொட்டு' சொல்லக் கூடியவைகளே யொழிய, இவர்கள் பெருமைப்படக் கூடியதாக ஒன்றும் அமைந்துவிடவில்லை.

ஆட்சிக்குப் புதிதாகச் சிலர் வந்திருக்கிறார்கள், அவர்கள் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட மகாத்மாவின் கட்சியினர், மஞ்சள் பெட்டியினர், என்றுதான் மக்கள் எண்ண முடிகிறதே யொழிய, அந்த ஒரு எண்ணத்தால மட்டுமே, ஏக்கத்தையும், துக்கத்தையும் அதிகமாக வெளியே காட்டாதிருக்கிறார்களே யொழிய, காங்கிரஸ் கட்சியினால், கனிரசம்போன்ற வாழ்க்கைச்சுகம் கண்டுவிட்டோம், கஷ்டங்கள் போய் விட்டன, என்று பொதுமக்கள் யாரும் கூறமாட்டார்கள் — கூற முடியாது.

வரிப்பளுவு அதிகமாயிற்றே தவிர, குறையவில்லை.

வறுமையும் வாட்டமும் அதிகரித்ததேதவிர குறையவில்லை. ஆலைத் தொழிலாளி அல்லற் படவும், வயலில் வேலை செய்பவன் வாட்டமடையவும், ஆலையில் வேலை நிறுத்தமோ கதவடைப்போ நடைபெறுவதும், தடியடி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுவதும், கடைசியில் தொழிலாளரின் முயற்சி முறியடிக்கப் படுவதும், அதுபோலவே, உழவர் கிளர்ச்சியும், உழவர்-மிராசுதாரர் கைகலப்பும், போலீஸ் பிரவேசமும், பலருக்குச் சிறைவாசமும், சிலருக்குப் பிராணச் சேதமும், விளைச்சல் குறைவும், பாட்டாளி பட்டினியும் ஆகிய இவைதான் நிலைமையே தவிர, மஞ்சள் பெட்டியின் மகத்வத்தாலே, மக்களின் வாழ்வு வளம் பெற்றதாக யாரும் கூற முடியாது.

ஆளவந்தார்கள் இதுவரையில், இந்நாட்டு இயற்கைச் செல்வத்தை வளமாக்கியோ, புதிய தொழில்களை ஏற்படுத்தியோ, பொதுச் செல்வத்தையும் நன்மையையும் அதிகப்படுத்தியதாகவோ விரல்விட முடியாது.

அதிகாரிகளின் போக்கோ, முறையோ மாறியதாக, அவர்களே கூட ஒப்புக்கொள்வதில்லை. சிலநாட்களுக்கு முன்பு 'தினசரி'யே போலீஸ் இலாக்கா பழைய முறையைக் கைவிடவே இல்லை, என்று குறை கூறிற்று.

இலஞ்சத் தாண்டவம் அடங்கி விட்டதாக, காங்கிரஸ்காரரேகூடக் கூறுவதில்லை.

வேறு என்னதான், இந்த ஆளவந்தார்களால் கண்ட பலன்?

எதுவும் இல்லை என்றாலும், இவர்கள் ஆளவந்த பிறகு, முன்பு இருந்தது போல, மந்திரிகள், கவர்னர்கள், போன்ற உயர் பதவியினருக்காகத் தரப்படும் சம்பளமும் செலவினமும் குறிப்பிடத்தக்க அளவிலும், பெருமை தரும் முறையிலும் குறைக்கப்பட்டதா என்றால், இல்லை, இல்லை, என்றே கூறவேண்டியிருக்கிறது.

கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார், தமது பதவியின் இலட்சணத்தைத் தாமே கூறிவிட்டார்-மந்திரிகள் அனுப்பும் காகிதங்களில் நான்கையொப்பம் இடவேண்டும், அவ்வளவுதான் எனக்குள்ள அலுவல் என்று.

என்ற போதிலும் அவருக்கு அளிக்கப்படுவது மாதம் 20,000-0-0 ரூபா சம்பளம். மற்ற வகைச் செலவுகள், ரூபா 88,666-0-0. ஆகிறது.

ராஜாஜி வேதாந்தி-கூறுவது நாமல்ல—அவருடைய நண்பர்கள். அவருக்காக ஏழை இந்தியர் தரும் பணம் 1 09,566-0-0. வெள்ளையர் பெறும்போது ஏன் இதனைக் கூறவில்லை, என்று நம்மைக் கேட்பர்.

சம்பளக் கொள்ளை என்று இதனைக் குறிப்பிட்டு எழுதி, இந்த ஆட்சி ஏன் ஒழியவேண்டும் என்பதற்கு இந்தச் சம்பளக்கொள்ளையையே ஒரு காரணமாகக் காட்டி, குடி அரசில் தலையங்கம் எழுதியதற்காக, பெரியார் இராமசாமி ஒருமுறை தண்டிக்கப்பட்டார்—இந்த உண்மையை மறைத்து விடுவார்கள்—உங்களிடம் கூறமாட்டார்கள்.

நாங்கள் கேட்டதும் கேட்காததும் ஒருபுறம் இருக்க, வெள்ளையர் காலத்தில், இப்படிப்பட்ட சம்பளக் கொள்ளைகளைச் சரமாரியாகக் கண்டித்த காங்கிரஸ் நண்பர்கள் எதற்காக, கவர்னர் ஜெனரலுக்கு, அதிலும் ஒரு கர்மயோகிக்கு, கண்ணன் காட்டிய வழிச் செல்பவருக்கு, படாடோபத்தில் விருப்பமற்ற ஆச்சாரியாருக்கு, இவ்வளவு சம்பளம் தரவேண்டும்.

மற்றும், வெளிநாட்டுத் தூதர்களுக்காக, ஆண்டு ஒன்றுக்கு

ரூபா 89 31 700—0—0.

செலவிடப்படுகிறது-சரியா? தேவையா?

மலேயா, மோரிஸ், சிலோன் பர்மா, ஆகிய இடங்களிலே, இங்கிருந்து போயுள்ள மக்கள், எலும்புந் தோலுமாகக் கிடப்பதை, உலகம் அறியாதா. அந்த உலகின் கண் முன்பு, நமது 'தூதுவர்களுக்கு' டாபீகபான நிலை அளிப்பதால், என்ன என்னும், நமது ஆட்சி முறையைப் பற்றி.

பிரிட்டனில உள்ள தூதுவருக்கு மட்டும் 9 மோட்டார்களாம்—அதிலொன்று ரோல்ஸ் ராய்ப்!! இங்கேயோ, நமது தலைவர்கள் போக போக்கியத்தில் மோகங்கொள்ளாதே, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து, கூலியுயர்வு கேட்டபடி இருப்பது தொழிலாளிக்குஒருவகை

மறைந்தியா தியாகிவிட்டதுஎன்றெல்லாம் உபதேசிக்கிறார்கள். நியாயமா!

மந்திரிகளின் மோட்டார் மெருகு கலைந்ததும் மாற்றிப் புது மோட்டார் வாங்குகிறார்கள்— ரிப்பேர் செய்து கொள்ளக் கூடாதா என்று கேட்டால், ரிப்பேருக்குச் செலவு அதிகமாகிறது, அடிக்கடியும் ரிப்பேர் தேவைப்படுகிறது, இதைவிடப் புதிய மோட்டார்கள் வாங்குவதே நல்லது என்று மந்திரி பதில் கூறுகிறார், ஏனய்யா உங்கள் மோட்டார் மட்டும் அடிக்கடி கெட்டுப் போகிறது என்று கேட்டால், அதுதானே தெரியவில்லை, என்று, யாரோ ஆலமரத்தடியிலிருப்பவர் பதில் கூறுவதுபோல, நாடாளும் அமைச்சர் பேசுகிறார்.

எந்த நல்ல காரியத்துக்கும் பணமில்லை என்று கூறிவிடுகிறார்கள்.

பணம் வரக்கூடிய வகையில், இலாபம் தரும் தொழில்களை முதலாளிதவ முறையிலே விட்டுவைக் காமல் சர்க்காரே ஏற்று நடத்தினால், பணம் கிடைக்குமே என்று கூறினால், முதலாளித்துவத்தை ஒழிக்கும் வேலையை இப்போது மேற்கொள்ள முடியாது என்று கூறிவிடுகிறார்கள்.

சேலத்தில் இரும்பும், தென்ஆற்காட்டில நிலக்கரியும் கிடைக்கிறதாமே, ஏன் இங்கு சர்க்கார் இரும்பு எஃகு தொழிற்சாலை அமைக்கக் கூடாது என்று கேட்டால், யோசிக்கிறோம், வசதி இல்லை என்கிறார்கள் —அதேபோது பீகாரிலும் வேறிடத்திலும் புதிய இரும்புத் தொழிற்சாலையை அங்குள்ள சர்க்கார்கள் அமைக்கிறார்கள்.

எதற்கு எடுத்தாலும் டில்லி, டில்லி, என்று கூறிவிடுகிறார்கள்.

அங்கு அடிக்கடி போய்வர விமானம் வாங்கி, அதற்கு மாதம் 4,500 ரூபாய் செலவை அள்ளி வீசுகிறார்கள்.

ஆயிரம் இருக்கிறது இதுபோல ஆளவந்தார்களின் அரசியல் நடவடிக்கையில் குறைகூற. சட்டசபையிலே பொடிபோடலாமா, குறட்டைவிட்டுத் தூங்கலாமா, என்பன போன்ற மகத்தான விஷயங்களைப் பேசிப் பொழுதுபோக்கும் இலட்சணமும், இதனாலே தலைவலி வந்துவிடுமோ, அதற்கு அமைச்சர் அமிர்தாஞ்சனம் தருவதும், ஆக இப்படி இருக்கிறது ஆளவந்தார்களின் போக்கு.

இவர்கள்தான் பேசுகிறார்கள், அரசியல் கிளர்ச்சிக்காக, இந்தி எதிர்ப்பை ஒரு சாக்காகக் கொள்கிறார்கள் என்று.

உண்மையில் பார்க்கப்போனால், இந்தி எதிர்ப்பில் ஈடுபடுவதால், பல அரசியல் நடவடிக்கைகளில் உள்ள தவறுகளைப் பொதுமக்களிடம் கூறத் திராவிடர் கழகத்துக்கு அவகாசம் இல்லாமற் போய்விடுகிறது.

பொதுவாகக் காங்கிரஸ் கொள்கையை ஆதரிக்கும் பல ஏடுகள், ஆளவந்தார்களின் போக்கிலே அதிருப்தியை அடிக்கடி தெரிவித்துக் கண்டித்து எழுதி இருக்கிறதே போதும் இவர்களின் மக்கள் சர்க்கார் விஷயமாக பொதுமக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதை விளக்க.

வடநாட்டுச் சேட்டு வாங்கும்
வட்டிகள் வரி வியாபாரம்
முடமாக்கிச் சமுதாயத்தை
மூலையில் சேர்க்கும் இம்சை
மடக்காரச் சாமியார்கள்
மதிப்பினும் ஓங்குமானால்
அடக்கார வேளைக்காரன்
அகன்றதால் இலாபம்
உண்டா?

* * *

அரசு நம் கையில் வந்தும்
அதிகாரி மாறவில்லை
உரிமைகள் வந்த பின்னும்
ஊழல்கள் நிற்கவில்லை
தெருவெலாம் சுடுகாடாகும்
தீராத பசியிருந்தும்
அரிசியை மறைத்து விற்கும்
அற்பர்கள் சாகவில்லை.

* * *

ஊற்றின் வாய் அடைத்து நல்ல
ஊருணி மூடும் பேயர்
ஆற்றையும் ஆக்ரமிக்கும்
அதமர்கள் உன்னைச் சுற்றி
போற்றி நற்பதவி பெற்றுப்
புகழ்கின்றார், ஐயோ அண்ணே
சோற்றிலே நஞ்சு வைப்பார்
சேர்க்கைகள் உனக்கேன்
அண்ணே?

* * *

இப்படிக் கதறுகிறார், காங்கிரஸ்காரர், காங்கிரஸ் ஏட்டின் மூலம் —மதுரை 'தமிழ் நாடு' இதழில் காணலாம் கவிதையை.

இலட்சணம் இது! பேசுவதோ, தாங்கள் ஏதோ ஆட்சி செய்து, மக்கள் கஷ்டத்தை எல்லாம் போக்கிவிட்டது போலவும், நாம் ஏதோ, இவர்களிடம் வேறு எவ்வித குற்றம் குறையும் காண முடியாததால் இந்தி எதிர்ப்புத் துவக்கி இருப்பதாகவும், பசப்பு வார்த்தை! கவியாடிக் கசிந்துருகும் நண்பர் போலவே நாமும் கூற ஆசைப்படுகிறோம், ஐயோ! அண்ணே! அரசியலைப் பேசாதே! அதிலே ஆயிரத்தெட்டு கோணல்! அவைகளைக் கூறக் கூட நேரமில்லை இந்தி எதிர்ப்பினால். இது முடிந்து அந்தப் பாலம் ஆரம்பமானால் அண்ணே, உனக்கு நல்ல தல்ல! வேண்டுமானால், அச்சாரம் போலச் சில தருகிறேன் யோசித்துப் பார்,

1. மதுவிலக்கு வெற்றிதரவில்லை.

2. இனம் ஒழிப்பு கைவிடப்பட்டது.

3. கல்வித்திட்டம் பலனில்லை.

4 ஜெமீன் ஒழிப்புக்குப் பண வசதி இடம் தரவில்லை.

5. திறந்த கோயில்களில் ஆதித்திராவிடர் போக, நேரமில்லை, வசதியில்லை, நினைப்புமில்லை.

6. புதிய தொழில் திட்டம் எதுவுமில்லை.

7. தொழிலாளர் துயரம் தீரவில்லை.

8. உழவர் உள்ளம் குளிரவில்லை.

9. அடக்கு முறைகளோ பஞ்சமில்லை.

10. 144, போடாத நாளில்லை.

11. தடியடி தாராளமாக நடைபெறுகிறது.

12. கண்ணீர்க்குண்டு, துப்பாக்கி வேட்டு, நடைபெறுகிறது.

13 உணவுப்பஞ்சம் ஒழியவில்லை.

14. பண்டம், கிடைப்பதில்லை.

15. பிளாக்மார்க்கட் ஒழியவில்லை.

16. சிறையிலே, பொதுநலத் தொண்டர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

17. தமிழர் - ஆந்திரர் பேதம் விரிவடைகிறது.

போதுமா, அண்ணேன்! ஆட்சியினாலே வந்த அத்தனையையும் கூற நேரமில்லை, இந்தி ஒழியட்டும், அண்ணேன், பிறகு பேசிக்கொள்வோம், மற்றவைகளை.

காஞ்சியில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்

★

29-8-48 ஞாயிறு மாலை 6 மணிக்கு பெரிய காஞ்சிபுரம் திராவிடர்க் கழக சார்பில் திரு. வி. கண்ணப்பர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர் சித்தையன் அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம்:—அன்பு மிக்க தலைவரவர்களே! தோழர்களே! உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி. தற்கால அரசியல் நிலைமையை நோக்கும்போது முதன்மையாக நம் முன் நிற்பது, சென்னைக்கு சமீபத்தில் வந்து சென்ற இந்திய பிரதமர் ஜவஹர்லால் அவர்களின் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட—முன்னுக்குப் பின் முரண்பட்ட பேச்சுக்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாகிறோம். அவர் பேச்சில் முக்கியத்துவம் வாய்ந்தது, "மாகாணப் பித்து இருக்கக் கூடாது, அப்படி இருந்தால் அதை நாம் முதலில் அகற்ற வேண்டும்" என்று கூறியிருக்கிறார். ஆனால் அதே நேரு, மாகாண கமிஷன் அமைக்க வேண்டும் என்று கூறுவதோடல்லாமல், காஷ்மீரின் கலங்கிய மக்களே என் கண் முன்னால் நிற்கிறார்கள், அதை நான் மறக்க முடியாது, ஏனெனில் நான் பிறந்தமாகாணம் அது, அதை என்னால் மறக்க முடியாது என்றும். மாகாணப்பித்து நமக்குக் கூடாது எனக்கூறும் ஜவஹர் அவர்கள், தான் மாகாணப் பித்தை எவ்வளவு கொண்டிருக்கிறார் என்பதை பின்னாலேயே கூறியிருக்கிறார். இது எதைக் காட்டுகிறது என்றால் தற்கால அரசியல் எவ்விதத்தில் செல்கிறது என்பதைக் கண்ணாடிபோல் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது, மேலும், காஷ்மீர் கலவரத்தாலும், ஹைதராபாத் தகராறாலும், நாட்டில் வரும் வருமானத்தில் பாதிக்குமேல் செலவிடப்பட வேண்டிய நிலையில் நாடு வந்திருக்கிறது. இப்படி நாடு நலிந்து குழம்பிக்கொண்டிருக்கும் நிலையிலே தான் அரசாங்கம் அவசர அவசரமாக இந்நாட்டிற்கு இந்தியைக் கட்டாய பாடமாக புகுத்தியுள்ளது. அதிலும் குழப்பம்தான், அரசாங்கத்துக்குள்ளாக. முதலில் தமிழ் நாட்டைத் தவிர்த்து கேரள, கன்னட, மலையாள, ஆந்திர நாடுகளில் கட்டாயம், என்றனர். ஆனால், எக்காரணத்தாலேயோ அத்தீர்மானத்தை அடுத்த மாதத்திலேயே மாற்றித் தமிழ் நாட்டுக்கும் கட்டாயம் என்று அரசியலார் திட்டம் தீட்டிவிட்டனர். அதிலும் முதல் பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரையில். முதல் பாரத்தில் படிக்கும் சிறுவனது வயது பதினொன்று என்றால் அந்தச் சிறுவயதிலேயே அவனுடைய மூளையில் மூன்று மொழியை அரசாங்கம் திணிக்குமேயானால், அச்சிறார்களின்நிலை என்னாகும்! நூற்றுக்குத் தொண்ணூறு பேர் படிக்கத்தெரியாத இந்நாட்டில்—தொண்ணூறு பேர் தற்குறிகளாய் இருக்கும் இந்நாட்டில், மூன்று மொழியைத் திணிக்கவேண்டிய அவசியம் என்ன? அதிலாவது இந்திமட்டுமா என்றால், இந்தியோ, அரபியோ, மலையாளமோ, தெலுங்கோ, கன்னடமோ, எது இஷ்டமோ அதைப் பிள்ளைகள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறது அரசாங்கம். ஆனால், பள்ளியில் இந்தி உபாத்தியாயர்தான் இருப்பார் — இருக்கிறார். இந்திதான் பொதுபாஷையாக இருக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் ஆங்காங்கு கூட்டங்களில் கூறி வருகின்றனர். இதிலிருந்து இந்தியையே அரசாங்கம் கட்டாயம் திணிக்கிறது என்று தெற்றெனப் புலப்படுகிறது. ஆயினும் அரசாங்கம் மழுப்புகிறது, எந்த மொழியை வேண்டுமானாலும் நீங்கள் படிக்கலாம் என்று. தவிரவும், இந்தியிலேயே தலைவர்களுக்குள்ளாகவே குழப்பம். இந்திபொது மொழியா? ஹிந்துஸ்தானி பொது மொழியா என்று. இப்படி இன்றைய அரசாங்கத்தின் நிலை குழப்பத்தில் இருந்துகொண்டு இருக்கிறது. இக்குழப்ப நிலையை மாற்றி நன்னிலைக்குக் கொண்டுவரும் எண்ணமே திராவிடர்க் கழகத்தின் முடிவு. எனவே, இந்தியை நாம் எல்லோரும் எதிர்த்து அதை விரட்டி யடித்து, குழம்பும் அரசாங்கத்தையும் ஓர் நிலைக்குக் கொண்டு வருவோம். எனப் பேசிமுடித்தார்.

அடுத்தபடி தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசினார். அதன் சுருக்கம்:—அன்புசெழுமிய தலைவரவர்களே! தோழர்களே! உங்கள் அனைவருக்கும் என் நன்றி. தற்கால அரசியல் நிலை என்ற தலைப்பில் நாம் எதை வேண்டுமானாலும் பேசலாம். இன்றைய அரசாங்கத்தின் நிலை என்னவென்னுட்டைப் பொறுத்த வரையில் என்றால், இந்தியை இன்று கட்டாய பாடமாகக் கொண்டு வந்துள்ளார்கள். அதைத்திராவிடர்க்கழகத்தாராகிய நாம் எதிர்க்கிறோம் என்றால், அரசாங்கத்தார் கூறுகிறார்கள் காங்கிரஸ்காரர் செய்யும் எதையும் எதிர்க்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட திராவிடர்க்கழகத்தார் இதையும் எதிர்க்கிறார்கள் என்று—எந்தக் காரியத்தை நாம் எதிர்த்தோம். ஜமீன் இனும் ஒழிப்பு மசோதா கொண்டுவந்தனர். நாம் மாநாடு நடத்தி ஆதரவு தந்தோம்; அவர்களுடன் ஒத்துழைத்தோம். மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தார்கள், அதற்கு உறுதுணை புரிந்தோம். தேவதாசி முறை ஒழிப்பு கொண்டு வந்தனர். பாராட்டினோம். நம் பத்திரிகைகளில் எழுதியும் அதற்கு ஆதரவு தந்தோம். தீண்டாமை ஒழிய வேண்டும். அரிஜனங்கள் ஆலயத்திற்குள் செல்லவேண்டும் என்றனர். நாம் முன்னால் ஓடி மும்முரமாக வேலைசெய்தோம். ஆலயப் பிரவேசத்தில் இன்றும் ஆண்டவனைத் தொட ஒரு சாராருக்கே உரிமையுண்டு என்பது ஒழியவில்லை. இங்கிருக்கும் ஏகாம்பரநாதனை காமராஜோ, ஓமந்தூராரோ, குப்புசாமி நாயுடுவோ தொட முடியுமா என்று கேட்கிறேன். உண்மையில் அவர்கள் தொட இலாயக்கற்றவர்களாகத்தான் இன்றும்எண்ணப்படுகிறார்கள். எல்லோரும் ஆண்டவன் அருகில் சென்று தொழ உரிமை வேண்டுமென நாங்கள் கூறுகிறோம். இவ்வளவையும் நாங்கள் ஆதரித்தோம்; உதவி புரிந்தோம்; உடனிருந்து வேலையும் செய்தோம். எதையும் எதிர்க்கும் எண்ணங் கொண்டவர்கள் என்று நம் காங்கிரஸ் தோழர்கள் கூறுகிறார்களே, இப்பொழுது கூறட்டும் நாம் எதை எதிர்த்தோம் என்று. எப்படியாவது திராவிடர்க்கழகத்தை அடக்கிவிட வேண்டுமென்று சர்க்கார் எண்ணி இப்படிக் கூறுகிறதே ஒழிய, என்னளவு உண்மையாவது சர்க்கார் கூறுவதில் இருக்கிறதா என்று நீங்களே எண்ணிப்பாருங்கள். நாங்கள்-திராவிடர்கழகத்தாராகிய நாங்கள்—இந்தியை இன்று மட்டும் எதிர்க்கவில்லை,

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 5—9—48 [ஞாயிறு

அஞ்சமாட்டோம்

●

ஆட்சி மாறிவிட்டது. ஆனால் ஆளும் முறை துளியும் மாறவில்லை. ஆங்கில ஆட்சியின்போது என்னென்ன குறைகள் இருந்தனவோ, என்னென்ன கொடுமைகள் நடந்தனவோ, அவையெல்லாம் இன்றைய ஆட்சியிலும் அளவிலும் தன்மையிலும் உரம்போட்டு வளர்ப்பதுபோல் வளர்ந்துகொண்டே போகின்றன. வெள்ளைக்காரனை வெளியே போகும்படி செய்தது வேறொன்றுக்காகவுமல்ல, "நீ செய்கின்ற காரியங்களை எல்லாம் நாங்கள் இன்னும் அதிக 'திறமை'யுடனும் உரிமையுடனும் செய்யக்கூடியவர்களாக இருக்கும்போது, நீ இங்கு இருக்க வேண்டிய இன்றியமையாமை எதுவுமே இல்லை; நாங்கள் செய்கின்ற காரியங்களைக் கண்டு நீயே ஆச்சரியப்படுவாய், ஆங்கில ஆரியனே அஞ்சாதே! நாங்களும் உன் இனம் தான்; எனவே இனம் இனத்தைக் காக்கும், கவலைவேண்டாம்; சற்று வெளியே இருந்து வேடிக்கை பார்" என்று கூறி வெள்ளையனுடைய வேலையை இன்னும் விறுவிறுப்பாகச் செய்வதற்காகவே இன்று நம்மை ஆளுவோர் ஆங்கிலேயனை வெளியேற்றினர்.

இதனை மக்கள் அறிவதற்கு அதிக காலத்தை உண்டாக்குவது முறையல்ல என்று கருதியோ என்னவோ, ஆங்கிலேயன் ஊர்போய்ச் சேர்வதற்குள்ளாகவே அவனுடைய வேலைகளை நம்முடைய 'தலைவர்கள்' செய்யத் தொடங்கிவிட்டனர். வஞ்சம் தீர்த்துக்கொள்ள எண்ணுகிறவர்கள், எப்போது எங்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்து அந்த வாய்ப்புக் கிடைத்தால் அளவுகடந்த ஆனந்தம் உண்டாவதுபோல் காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆளும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனவே ஆளுகிறார்கள் "என்னவோ என்று நினைத்தாயே, இதோ பார், உன்னுடைய ஆட்சி முறைகூட எங்கள் ஆட்சி முறையிடம் பிச்சை வாங்கவேண்டும்" என்று ஆங்கிலேயனை நோக்கிக்கூறும் முறையில.

ஆங்கிலேயர்கள், தங்களுடைய ஆட்சிக்காலத்தில் காங்கிரஸ்காரர்கள் நடத்திய உரிமைப் போராட்டங்களை எல்லாம் தடை செய்தனர்; தடியடித் தர்பார் நடத்தினர்; சிறையில் தள்ளினர்; தொண்டர்களைத் திசைதெரியாத காடுகளில் கொண்டுபோய் விட்டனர்; இன்னும் பலப்பல கொடுமைகளைக் கொஞ்சமும் கூசாமல் செய்தனர். இவையெல்லாம் அன்று காங்கிரஸ்காரர்களால் மட்டுமல்ல, நாட்டு நலனில் நாட்டங்கொண்ட அனைவராலுமே கண்டிக்கப்பட்டன. ஆனால், இன்று நடப்பதென்ன? அன்று எதெது கண்டனத்துக்குரியதாக இருந்ததோ அதெல்லாம் இன்று கையாளவேண்டிய நல்ல முறைகளாக நாடாள்வோரால் கருதப்படுகின்றது.

அன்று அயல் நாட்டுத் துணிகளை வாங்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்கள் கூறியதைக் குற்றமாகக் கருதிய ஆங்கில அரசாங்கம் அவர்களைக் காடுகளில் கொண்டுபோய் விட்டது. இன்று அயல்நாட்டுமொழியைக் கற்காதீர்கள் என்று கூறுபவர்களை இன்றைய ஆரிய ஆட்சிக்கு அடிபணிந்து நிற்கும் சென்னை அரசாங்கம் காடுகளில் கொண்டுபோய் விடும் 'கண்யமான' செயலையே பின்பற்றுகின்றது.

இந்தி எதிர்ப்பாளர்களைக் கைது செய்யாமல் காடுகளில் கொண்டு போய் விடுவதால் அந்த இயக்கத்தை அழித்துவிடலாம் என்று இன்றைய அரசாங்கம் கருதுமானால், அது, தன்னுடைய பழையகால நிகழ்ச்சிகளை மறந்து விட்டது என்றுதான் பொருள். அன்று ஆங்கிலேயர் கையாண்ட அடக்கு முறைகள் எல்லாம் நாட்டின் விடுதலையை விரைவில் பெறுவதற்கு வழிகோலினவேயன்றி, அடக்குமுறைகள் அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றவில்லை என்பதைக் காங்கிரசன்பர்கள் தங்களுடைய அதிகார போதையில் இதற்குள் மறந்து விட்டாலும் நாம் அதனைமறக்கவில்லை.

எனவேதான், தமிழுக்குத் தமிழ்க் கலாச்சாரத்துக்கும் ஊறுண்டாக்கும் இந்தி நுழைவை, எந்தவிதமான கொடுமைகளையும் பொருட்படுத்தாமல் எதிர்க்கிறோம். காடுகளில் கொண்டுபோய் விடுவதாலோ, இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதாலோ உரிமைப் போராட்டத்தை உருக்குலைத்து விடலாம் என்று ஆளவந்தார்கள் கருதுவார்களானால் உண்மையிலேயே அவர்கள் ஏமாற்றத்தைத்தான் பலனாகக் காண்பர்.

இந்தி எதிர்ப்பாளர்களைக் காடுகளில் கொண்டுபோய் விடும் முறையைக் கண்டித்துச் சிலநாட்களுக்கு முன் 'தினசரி' ஒரு தலையங்கம் 'சரியான வழிகள்' என்ற தலைப்போடு எழுதி, அதில், போலீசாருக்குப் பழைய புத்தி இன்னும் போகவில்லை என்று குறிப்பிட்டிருந்தது. போலீசார்தான் இந்தி எதிர்ப்பை அடக்குவதற்கு வேண்டிய முறைகளைத் தாங்களாகவே செய்கின்றனர் என்று 'தினசரி' தன்னுடைய் தினப்புத்தியால் அறிந்திருக்கிறது போலும்! சர்க்காரின் வேலைத் திட்டங்களில் ஒரு பகுதியைப் போலீசார், சர்க்காரின் உத்தரவுகளுக்கேற்ப நடத்திக் கொடுக்கும் ஊழியர்களே என்பதைக்கூட அறிய முடியாத அறிவைப் பெற்றிருக்கும் 'தினசரி' போலீசாரே இந்திஎதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்கும் பணியினைச் செய்கின்றனர் என்று எழுதியதைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை.

இந்தி எதிர்ப்பாளர்களைக் காடுகளில் கொண்டுபோய் விடும்முறையைச் சர்க்கார் கையாள்வது, இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு இன்னும் அதிகவலுவை உண்டாக்குமென்றே நாம் கருதுகிறோம். இந்தி எதிர்ப்பு இயக்கம் பரவாத இடங்களில் கூட அது நன்றாகப் பரவுவதற்கு இந்த முறை பெரிதும் பயன்படுமேயன்றி, சர்க்கார் கருதுவதுபோல் இந்தி எதிர்ப்பியக்கம் தளர்வடையவோ, தொண்டர்களுக்கு இதனால் சலிப்பை உண்டாக்கவோ, முடியாதென்பதைச் சர்க்கார் உணரவேண்டும்.

எனவே, இந்தி எதிர்ப்பியக்கத்தை அடக்குவதற்குச் சர்க்கார் இப்போது கையாளும் முறைகள் எல்லாம், இதற்குமுன் ஆங்கில சர்க்காரால் கையாளப்பட்டுப் பழக்கப்பட்ட முறைகள்தான் என்பதையும், அந்த முறைகள்எல்லாம் சர்க்காருக்குத் தோல்வியையும், மக்களுக்கு வெற்றியையுமே தந்தன என்பதை

யும் நாம் நன்கறிவோமாதலால், சர்க்காரின் எந்தவிதமான அடக்குமுறையைக் கண்டும் நாம் அஞ்சவோ, சளைப்படையவோ மாட்டோம் என்பதை, ஆள்மாற்றத்தை மட்டும் மேற்கொண்டு ஆட்சிமுறையில் எவ்வித மாற்றத்தையும் கொள்ளாத—கொள்ள விரும்பாத இன்றைய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

வரவேற்கிறோம்

காங்கிரஸ்காரர்கள் விடுதலைப் போராட்டத்தை எதற்காக நடத்தினர் என்பது உண்மையாகவே பலருக்குத் தெரியாமல் இருந்தது. விடுதலைப் போராட்டத்தை நடத்தியது விடுதலை பெற்ற நாட்டிலுள்ள மக்களை விலங்கிடுவதற்குத் தான் என்பதை யார் எதிர்பார்த்திருக்க முடியும்? நாட்டுக்கு விடுதலை கிடைத்துவிட்டால் நம்முடைய உரிமைகள் எல்லாம் பாதுகாக்கப்படும் என்றே மக்கள் நம்பினர். ஆனால் இன்று நடப்பதென்ன? மக்கள் கைகளில் விலங்கு! மக்கள் கருத்துக்களுக்குத் தடை! மொழி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை! என்ற முறையிலேயே இன்று காரியங்கள் நடைபெறுகின்றன. "இராவண காவியம்" என்ற நூலுக்குத் தடைவிதித்த சர்க்கார், தடைவிதிப்பதையே தன்னுடைய கடமையாகக் கொண்டுள்ள சர்க்கார் இப்போது கவிஞர் பாரதிதாசன் அவர்களால் இயற்றப்பெற்ற "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடக நூலுக்கும் தடைவிதித்துள்ளது. இதனை நாம் கண்டித்தால், எதற்கெடுத்தாலும் சர்க்காரைக் கண்டிப்பதே இவர்களின் தொழிலாகி விட்டது என்று சிலர் நாக்கில் நரம்பின்றிக் கருத்தில் உரமின்றிக் கூறுகின்றனர். ஆனால் இங்கு தரப்படும் கண்டனம் நம்முடையதல்ல. காங்கிரஸ் ஏடான 'பிரசண்ட விகடன்' தரும் கண்டனம். படித்துப் பாருங்கள். 1-9-48ல் வெளிவந்த பிரசண்ட விகடனில் 'வரவேற்கிறோம்' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருப்பதைக் காங்கிரஸ் நண்பர்களின் பார்வைக்காக இங்கு வெளியிடுகிறோம்.

"சென்னை அரசாங்கம் இராவண காவியத்திற்குத் தடை போட்ட சில நாளைக்குள்ளாகவே, மற்றொரு சிறந்த நாடகத்திற்கும் தடை போட்டிருக்கிறது. இந்நாடகம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் எழுதப்பட்டு சென்ற பல ஆண்டுகளாக நாடகமாக நடத்தப்பட்டும் வருவதாகும். இதன் பெயர் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்பதாகும். அரசாங்கம் ஒரு நூலை அல்லது நாடகத்தைத் தடை செய்யும்போது அதற்குரிய காரணங்களைப் பொது மக்களும் தெரிந்து கொள்ளும் முறையில் ஓர் அறிக்கை மூலம் வெளிப்படுத்துவது தான் ஒழுங்கும் முறையுமாகும். சென்னை அரசாங்கம் அப்படிச் செய்யாதது குறித்து நாம் மிகவும் வருந்துகிறோம்

சென்னை அரசாங்கத்தைப்போலவே பம்பாய் அரசாங்கமும் அறிஞர்கள், சிந்தனைச் சிற்பிகளுடைய நூல்களைத் தடை செய்திருக்கிறது. அதாவது வெளிநாட்டிலிருந்து பம்பாயிலுள்ள ஒரு புத்தக நிலையத்துக்கு விற்பனைக்காக வந்த புத்தகங்களை பம்பாய் அரசாங்கம் தடை செய்திருக்கின்றது. தடை செய்யப்பட்ட புத்தகங்களில் உலகப் புகழ்பெற்ற மாக்ஸிம் கார்க்கி, மார்க்ஸ் எழுதிய நூல்களும் உள்ளடங்கியிருக்கின்றன. அறிவுக்குத் தடை போடுவதில் சென்னை அரசாங்கமும், பம்பாய் அரசாங்கமும் ஒரு தாயின் இரட்டைக் குழந்தைகளைப்போல் நடந்து கொண்டிருக்கிறது. மக்களின் அறிவு வளர்ச்சியின் மீது தடை போடும் அரசாங்கம் எதுவாக இருந்தாலும் அதனை எதிர்க்க வேண்டியது, நாட்டிலுள்ள முற்போக்கு சக்திகளின் கடமையாகும். சென்னை, பம்பாய் அரசாங்கம் ஆகிய இரண்டும் செய்த காரியங்கள் வரவேற்கப்பட வேண்டியவைகளாகும்; இதை ஏன் வரவேற்கிறோம் என்றால் இவ்விதத் தடைகளால் நாட்டில் எண்ணப் புரட்சி சீக்கிரம் உண்டாகும் என்றும், மக்களின் நோக்கத்தில் நிலைகீழான மாறுதல்கள் ஏற்படுவதற்கு வழி வகைகள் உண்டாகும் என்றும் நாம் கருதுவதால்தான் இதனை நாம் வரவேற்கிறோம்."

வாழ்க்கை ஒப்பந்தம்

காஞ்சிபுரம் தோழர் அ. க. தங்கவேலர் அவர்களின் தம்பி அ. க. நடேசன் அவர்கள் புதல்வி இரஞ்சிதத்திற்கும் சென்னைத் தோழர் K. C. இராமச்சந்திரன் தம்பி ஜெயராமனுக்கும் 29—8—48-ல் காஞ்சிபுரத்தில் தோழர் அண்ணாதுரை தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டுத், திருமண நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

11-ம் பக்கத் தொடர்ச்சி

இந்நாடு சேர்ந்திருந்ததில்லை. இது ஐம்பத்தாறு தேசமாக இருந்தது என்று புராணங்களிலும் கூறக் காண்கிறோம். வெள்ளைக்காரன் துப்பாக்கி முனையைக் காட்டி சிறு சிறு நாடாக பிடித்துச்சேர்த்து, ஒன்றாக்கி டில்லியைத் தலைநகராகக் கொண்டு ஆள்வதற்குச் சௌகரியப் படுத்திக் கொண்ட பிறகே இது ஒரு நாடு—தேசியமாக ஆக்கப்பட்டதே ஒழிய வேறு எக்காலத்திலேயும் இந்தியா ஒரு நாடு என்றோ தேசம் என்றோ சரித்திரத்திலேயே கிடையாது. எனவேதான், இது ஒரு தேசமல்ல இதற்கு ஒரு தேசிய மொழி தேவையில்லை என்கிறோம். என்றும் தென்னாடு வடநாட்டுடன் சேர்ந்திருந்ததில்லை. வடநாட்டுக் கலாச்சாரம் வேறு; தென்னாட்டுக் கலாச்சாரம் வேறு என்று எடுத்துக் காட்டுகிறோம். இந்தி மொழியின் திணிப்பு வடநாடு, தென்னாட்டின் மீது எடுக்கும் படையெடுப்பேதான் என்று கருதுகிறோம். ஆகவே, அதை எதிர்க்கிறோம். இந்தி வந்தால் தமிழ் கெடாது என்று இன்றுள்ள சில தேசியத் திராவிடத் தோழர்கள் புளுகுகிறார்கள். இந்நாட்டில், வடநாட்டு சமஸ்கிருதம் நுழைந்த பிறகல்லவா, கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலியன தோன்றின. ஐந்து கோடி மக்கள் பேசிக்கொண்டிருந்த மொழி இன்று இரண்டரைக் கோடி மக்கள் பேசும் அளவுக்கு வந்ததற்குக் காரணம், சமஸ்கிருதத்தினாலன்றோ? இதை யார் மறுக்க முடியும்?

எனவே, இந்தியால்மேலும் தமிழ் கெடும் என்பதில் சற்றும் சந்தேகமே தேவையில்லை. தமிழ் மாத்திரம் கெடாது; தமிழர் பண்பு, கலை, கலாச்சாரம் கெட்டுச் சீரழிக்கப்படும் என்பதனாலேயே இந்தியைக் கடைசி வரை எதிர்த்துப் போராடியே தீருவோம்; வெற்றிபெறுவோம் எனக் கூறி, இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா, நீங்கள் எல்லோரும் வாருங்கள் தோழர்களே என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் பாடலை ஞாபகமூட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன் எனப் பேசி முடித்தார். தலைவர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

பறந்தது ஓர் புறா!

புறாவே! புறாவே! புதுத் திறப் புறாவே!!
பூசுரத் தலைவனைக் காணவோ செல்கிறாய்?
செல்லும் உன்னிடம் செப்புவேன் ஓர்மொழி
செத்த பாம்பினை ஆட்டிடுவோரை
செல்லரிச்சுவடியைத் தாங்கி நிற்போரை
செருக்கினால் பிறர் நிலை கெடுத்திடுவோரை
வெறுத்திடும் தமிழரின் வீரம் புகலுவாய்
வேதியர் தலைவன் பாதி அபமதியன்
கேளாக் காதினன் என்றெலாம் கூறுவர்
அந்நாள் அமைச்சராய் அவர் இருக்கையிலே!
இந்நாள் நிலையோ இந்திய பூமியில்
எழிலாம் பதவியில் இருப்பவர்! அறிவோம்.
எனினும் எமது இன்மொழித் தமிழினை
இகழ்ந்திடும் பேதையர் எந்நிலை கொள்ளினும்
எமக்கவர் பகைவர்—எதிர்ப்போம் அவரை!
பதவியின் பசையிலே பண்புள தமிழர்
இழந்திடமாட்டார் சுயமரியாதையை
எவர்நிலை உயரினும் எந்நிலை தாழ்ந்திட
அவர்வழி சேருவ தறியின் அயர்ந்திடோம்.
இடமிகு திராவிடர் தீயன புரியார்
தீயன புரிந்திட வருபவர் தீயவர்!
கதையல சரிதம், கனவல, உண்மை!!
கல்லெடுத்திட்ட கனகனை அறிவர்.
எனவே அவர்வழி ஏன் மறிக்கின்றீர்?
எல்லாம் அறிந்திடும் ஏந்தலென்கின்றார்
உமக்குரைக்கின்றேன் உரிமையை இழக்க
[illegible] உயர் தமிழ் மக்களே?
உயர்ந்திடு மொழியினை உடைய அவர்மீது
உலுத்தரின் மொழியைத் திணிப்பது அழகோ?
திணிப்பது தவறெனக் கூறிய எமது
திராவிடத் தலைவனைச் சிறையிடல் முறையோ?
ஆண்டுஓர் எழுபது ஆன முதியவர்
ஆலென ஓங்கிடும் கழகம் கண்டவர்
ஆரியம் ஓங்கிடின் அறிவு கெடுமென
அன்றும் இன்றும் என்றும் சொல்பவர்;
வாழ்ந்திட வேண்டும் வையகமெல்லாம்
தாழ்ந்தவர் மேலவர் எனும் தருக்கின்றி
உழைத்திடும் மக்களை உறிஞ்சிடு கூட்டம்
ஊரில் இருப்பது உலகக் கேடென
உரைத்திடும் பண்பினர் ஊன்று கோலினர்
அவரை அடைத்திடச் சிறையோ நாட்டில்?
அதற்கோ வந்தீர், ஆள்வோம் என்று?
அறிவு வேண்டாம்! அன்பும் இலையோ?
ஆணவம் கொண்டவர் அரசு நிலைத்ததோ?
அவையெலாம் அறிந்திடல் அவசியம் அலவோ?
கூடிய இக்குழு கொண்டிடு கோலம்
வாடிய முகமதை யன்றோ தந்தது!
வரிசைகள், பவனிகள், வாழ்த்துகள் பெற்றிட
வந்த உமக்குத் தந்தனர் வெறுப்பு
காணுமிடமெலாம் கருப்புக் கொடிகள்
கையினில் ஏந்திய காளைகள் பாரீர்!
கவர்னர் ஜெனரல்! ஆமாம், பயனென்!
கருப்பு, கருப்பு, எங்கும் கருப்பு!
கடலலை அல்ல! காளையர் முழக்கம்!
வாழ்த்தல, வசைவல. கூறுரை அறிவீர்!
பட்டுடை அணிந்த பாவையர் சிலரும்
நெட்டுரு போட்ட வேதியர் தாமும்
அவரால் பிழைத்திடும் அறமிழந்தோரும்
ஆவரோ மக்களின் அரும்பெரும் மன்றம்?
பாரதோ பறக்குது, பற்பல மூலையும்!
கேளதோ கூறுரை! கேளதோ முரசம்!
என்றுமே கூறிடு என் அரும் புறாவே!
இன்மொழித் தமிழரின் இனிய தூதுவனே!
அன்றொரு கதையினை அளந்தனர் என்பால்
அரச குமாரனும் சாரங்கதரனும்
அவனோர் புறாவை அழகுற விடுத்திட
பசிநிறைப் பாவை பைந்தொடியாளிடம்
சென்றதாம், பிறகு சென்றனன் அவனென
செப்பினர் ஓர்கதை! செவிக்கு ஒரு சத்தம்!!
இன்று நீ பறந்திடு—தமிழரின் தூதனாய்!!
நின்றிடு ஓர்புறம், கூறிடு இம்மொழி
என்றுநான் கூறியே எழிலுறு புறாவினை
இணைவிழி கொட்டாது பார்த்துமே நிற்க,
தூது இனிக் கூறவோ, பாருமே நன்றாய்
என்றுமே புறாவும் எனைக் கேட்பதுபோல்
இருபுறம் விரித்துமே பறந்தது துகிலும்
ஓர்புறம் இருந்தது 'ஒழிக இந்தி!'
மறுபுறம் கண்டேன் 'பெரியார் வாழ்க!'

புலவர் பெருமக்கட்கோர் வேண்டுகோள்

—✲—

"வேண்டாத—இந்நாட்டுச் சிறுவர்களுக்கு ஏலாத இந்தி மொழியைக் கட்டாயமென்றும், விருப்பமென்றும் கூறிச் சிறுவர்கள்மீது சுமத்துவது நாட்டையும் மக்களையும் தமிழையும் அழிக்கச் செய்கின்ற செயலென்று இம்மாநாடு கருதுவதால், உடனே இந்தி மொழியை நடுநிலை உயர்நிலைப் பள்ளிக்கூடப் பாடத் திட்டத்திலிருந்து நீக்கவேண்டுமென அரசியலாரை வற்புறுத்துகின்றது."

இந்தத் தீர்மானம், 14-8-48ல் சென்னையில் நடைபெற்ற மாகாண ஆசிரியர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். மாணவர்களை மனப்பதையின் மாணிக்கங்களாக்கும் ஆற்றலும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கே உண்டு. மாணவர்களை மட்டுமல்ல, மாநிலத்தை ஆள்வோரை அதற்குரியவர்களாகச் செய்யும் ஆற்றலும் ஆசிரியர்களுக்கே உண்டு. இதனை ஆளவந்தவர்கள் மறந்துவிட்டது உண்மையிலேயே மன்னிக்க முடியாத குற்றமாகும்.

இந்தி, நாட்டையும் மக்களையும் தமிழ் மொழியையும் அழித்துவிடும் என்று ஆசிரியர்கள் கூறிய பின்னரும், ஆளவந்தார்கள் இந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக வைத்துக் கொண்டிருப்பது, தம்மை ஆளும் திறமைக்கு ஆளாக்கிய ஆசிரியர்களை அலட்சியப்படுத்தி அவமானப்படுத்தும் ஒரு ஆணவமென்றே ஆசிரியர்கள் கருதுவர்.

மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது எது? வேண்டாதது எது? என்பதை அறிந்து அதற்கேற்ப அவர்களை அறிவுத் துறைக்கு அழைத்துச் செல்லும் உரிமையை ஆசிரியர்களிடமிருந்து ஆளவந்தார்கள் பறிக்கும் கொடுமை, எதை—எப்படி—எப்போது—யார் செய்வது—யாரைக் கொண்டு செய்விப்பது என்பதைக்கூட அறிய முடியாதவர்களை நாடாள்வோராக ஆக்கிக் கொண்ட ஒரு நாட்டிலன்றி வேறெங்கும் நடக்க முடியாது.

இத்தகைய நெறி தவறிய ஆட்சிப் போக்கைக் கண்டிக்கும் முறையிலேயே,

"தமிழ் மொழியினைப் பிற எம்மொழியும் ஆதிக்கம் செய்வதைத் தமிழாசிரியர்கள் எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அதற்கானவற்றை நடைமுறையிலும் செய்தே தீருவார்கள்."

என்றும் ஆசிரியர்கள் மாநாட்டில் பேசப்பட்டது கண்டு களிப்படைகிறேன். இது, தமிழ் மொழி பிற மொழிக் கலப்பினால் கட்டாயம் சிதைவுறுத் தன் செம்மையை இழக்கும் என்பதை நன்குணர்ந்த புலமை மிக்க ஆசிரியர்களால் கூறப்பட்ட உண்மையாகும். இதனை ஆளவந்தார்களால் அறிய முடியவில்லை என்றால், திராவிடர் கழகத்தார் மேற்கொண்டுள்ள இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஆசிரியர்களும் ஈடுபட வேண்டுமென்ற நிலைமையை ஆளவந்தார்கள் உண்டாக்கி விட்டார்கள் என்றே பொருள். இல்லையேல், மாணவர்களுக்கு எது தேவை என்பதை உணர்ந்து அதற்கேற்ப அவர்களுக்கு அறிவு புகட்டும் ஆசிரியர்கள் விரும்பாத இந்தித் திட்டத்தை மாணவர்கள் தலையில் ஆளவந்தார்கள் சுமத்துவார்களா? இதனைப் புலவர் பெருமக்கள் பார்த்துக்கொண்டு வாளா இருப்பார்களா?

எனவே, புலவர் பெருமக்களே! தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டதென்பதை ஐயந்திரிபற உணர்ந்த ஆசிரிய அன்பர்களே! இனியும் நீங்கள் வாளா இருத்தல் முறையாகாது. தமிழ் உங்களால் வளர்கிறது—வளம் பெறுகிறது—பாதுகாக்கப்படுகிறது என்ற உண்மையினை நிலைநாட்டும் இந்த அரிய வாய்ப்பைக் கைவிடாதீர்கள். ஆம், நீங்கள் எல்லோரும் வந்துதான் தீரவேண்டும். திராவிடர் கழகத்தார் இப்போது நடத்தும் இந்தி எதிர்ப்பு மறியல், அரசியலைக் கைப்பற்றுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சி என்ற காங்கிரசன்பர்களின் கூற்றைச் சுக்குநூறாக்கி, அது உண்மையான கலாச்சார மொழிப் போராட்டமே என்பதை ஆளவந்தார்களுக்கு உணர்த்தி, அவர்களின் தவறான போக்கைத் திருத்தும் பணியிலும், தமிழ்மொழியைப் பாதுகாக்கும் தொண்டிலும் புலவர்களாகிய நீங்களும் எங்களுடன் பங்கு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது திராவிடர்கழகத்தார் சென்னையிலுள்ள தொண்டை மண்டலம் துளுவவேளாளர் உயர்நிலைப்பள்ளிக்கூடத்தின்முன் இந்தி எதிர்ப்பு மறியலைச் செய்து வருகின்றனர். புலவர் பெருமக்களாகிய நீங்களும் சென்னையில் ஏதாவதொரு இந்தி கற்பிக்கும் பள்ளிக்கூடத்தின் முன் இந்தி எதிர்ப்பு மறியலைத் தொடங்கி நடத்துவீர்கள் என்றும், அதனால், தமிழ்மொழியும், தமிழ்க் கலாச்சாரமும் பாதுகாக்கப்படும் பணியில் வெற்றிபெற எங்களோடு ஒத்துழைப்பீர்கள் என்றும் எதிர்பார்த்து இந்த வேண்டுகோளை விடுகின்றேன். வாழ்க தமிழ்! ஒழிக இந்தி.

அண்ணாத்துரை
1-வது சர்வாதிகாரி

காஞ்சியில் இந்தி எதிர்ப்புக்கூட்டம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

பத்தாண்டுகட்கு முன்னர் கனம் இராசகோபாலாச்சாரியார் சென்னை மாகாண முதலமைச்சராய் இருந்த காலத்தில், கட்டாயமாகத் திணித்த காலத்திலேயே எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறோம்.

நாம் இந்தியை மட்டும் எதிர்க்கவில்லை. அரசியலிலேயும் கலக்கக் காரணம் என்ன என்று ஐயப்பாடுகள் தோன்றலாம். இந்தி, மொழிப் பிரச்னை மட்டுமல்ல; அது அரசியல் பிரச்னையும் கூட. இந்தியை மட்டும் அவர்கள் நுழைக்கவில்லை, இந்தியோடு, வடநாட்டுக் கலாசாரம், பண்பு முதலியவைகளையும் திணிக்கிறார்கள் என்பதாலேயே, திராவிடர் கழகம் அரசியலிலேயும் கலக்கக் காரணமாகிறது.

இன்றைய அரசாங்கத்தார் இந்தியா ஒரே தேசம். ஆகவே, தேசிய மொழி ஒன்றுவேண்டுமென்கிறார்கள். நாம்கூறுகிறோம்; இந்தியா ஒரு தேசமல்ல; ஒரு உபகண்டம் என்று. எந்தக் காலத்திலேயும் இந்நாடு ஒன்றாக இருந்ததில்லை. ஹர்ஷர் காலத்திலேயும் ஒன்றாக இருந்ததில்லை. அவுரங்கசீப் காலத்திலேயும்

(9-ம்பக்கம் பார்க்க)

★ பாராட்டுகிறோம் ★

—❀—

22—8—48-ல் ஜிம்கானா மைதானத்தில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். பல லாரிகளில் துப்பாக்கி சகிதம் இராணுவமும் போலீசும் வட்டமிட்டன. அன்று பெரியாரவர்கள் இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாகப் பேசுவதைக் கேட்கவே மக்கள் கடல்போல் சேர்ந்திருந்தனர். ஆனால், ஈரோட்டார் இராமசாமியார், பெரியார் இராமசாமியை சிறையில் அடைத்த செய்தி அவர்களில் பெரும்பாலருக்கு அப்போது தெரியாது. வரும்வழியில் பெரியார் சிறைப்படுத்தப்பட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டார்கள். என்றாலும் கூட்டத்தில் என்ன நடைபெறுகிறது என்பதைக் காண எல்லோரும் ஜிம்கானா மைதானத்திற்கு வந்தார்கள். பெரியாரின் பேருரையைக் கேட்கவந்த மக்கள், அவர் சிறைப்படுத்தப்பட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் திகைத்து நின்றார்கள். அந்தச் சமயத்தில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அங்கு தோன்றினார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே, தமிழருக்கும், தமிழர்கள் நலனுக்கும் பாடுபட்டு, தேய்ந்த உடலுடன், பல்வேறு மனப்பான்மை உள்ள மாகாண சர்க்காரின் கோபத்துக்கு பலமுறை இலக்காகியும், சர்க்காரின் கோபம் தன்னை என்ன செய்யாது என்ற உறுதி உள்ளத்துடன் மேடைமீது திரு. வி. க. காட்சியளித்தார்.

பெரியாரவர்கள் காங்கிரசிலிருந்து விலகிய காலத்திலேயே திரு. வி. க. அவர்களும் காங்கிரசிலிருந்து விலகினார் என்றபோதிலும், காங்கிரசைத் தூய்மைப் படுத்திவிடலாம் என்ற நல்லெண்ணம் அவருக்குப் பலகாலமாகத் தொடர்ந்து இருந்துவந்தது. அதனால் அவர் காங்கிரஸ் போர்வைக்குள்ளிருந்து கொண்டே தமிழர் நலனுக்காகச் சொல்லாலும், எழுத்தாலும் பணியாற்றி வந்தார். அந்தச் சமயத்திலெல்லாம் ஒரு ஒப்புயர்வற்ற தலைவர், காங்கிரசின் கபட நாடகங்களுக்கு ஆளாகி, உண்மைத் தமிழர் நலனுக்காக உழைக்க முன்வராமலிருக்கிறாரே என்று திராவிட மக்கள் எல்லோருமே கவலைப்பட்டதுண்டு. [illegible] தலைவர் திரு. வி. க. அவர்களின் நிலை முற்றிலுமே மாறிவிட்டது. திராவிடர் கழகத்தின் சார்பாக மாநாடா? அங்கே திரு. வி. க. வைக் காணலாம். பொதுக் கூட்டமா? அங்கும் அவர் இருப்பார். அந்த அளவுக்குத் தலைவர் திரு வி. க. அவர்கள் தம்முடைய நோக்கையும் போக்கையும் மாற்றிக் கொண்டது திராவிடர் கழகத்தாரால் பாராட்டி வரவேற்கக்கூடியதாகும்.

தலைவர்கள் சிறை சென்றுவிட்டார்களே! நாம் இங்குக் கூடியிருக்கிறோமே! நமக்கு ஆறுதல் கூறுவார் ஒருவருமில்லையா என்று அன்று ஏங்கி நின்ற இலட்சக் கணக்கான மக்கள் கூட்டத்தின் முன், திரு. வி. க. அவர்கள் தோன்றி, சர்க்காரின் அடக்குமுறையையும் பொருட்படுத்தாது, "இதோ நான் இருக்கிறேன் பயப்படாதீர்கள்" என்று ஊக்கமூட்டியதைத் திராவிட மக்கள் என்றுமே மறக்க முடியாது.

"நமது பெரியார் இராமசாமி அவர்களும், மற்றும் தோழர்களும் சிறையில இருக்கிறார்கள் என்பதற்காக நீங்கள் ஒருவரும் உங்கள் ஆர்வத்தை இழந்துவிட வேண்டாம். அவர்கள் இட்ட கட்டளையை நாம் செய்வோம். நாளை கனம் ஆச்சாரியார் வருகிறார். கட்டாய இந்தி வேண்டாம், அது வடநாட்டு ஆதிக்கத்திற்குத் தென்னாட்டை உட்படுத்த வகுக்கப்படும் சூழ்ச்சி, இதோ எங்கள் வெறுப்பைக் காட்டிக்கொள்ளுகிறோம் என்று கூறிக் கருப்புக் கொடி பிடித்து எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்போம், இதுவே சிறை சென்ற தலைவர்களுக்காக நாம் செய்யவேண்டியது" என்று உணர்ச்சி ததும்பப் பேசினார்.

தலைவர்கள் சிறை சென்றதால், மனக் கொதிப்படைந்திருந்த மக்களுக்குத் தைரியத்தையூட்டி, கடமையைச் செய்யுங்கள் என்று அன்று திரு. வி. க. அவர்கள் நினைவூட்டியதன் பலனை மறுநாள் ஸ்டேடியத்தில் நாம் பார்த்தோம்.

இந்தி எதிர்ப்புப் போர் முதற்படியிலேயே இன்று நிற்கிறது. தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் தலைவர்களைச் சிறைப்படுத்தியதற்குக் கண்டனங்களைத் தெரிவித்தன. மந்திரிகள் தங்கள் சுற்றுப்பிரயாணத் திட்டங்களை மாற்றிக்கொண்டு, சென்னைக்கே திரும்பிவிடக்கூடிய நிலைமையையுங் காங்குள்ள திராவிட மக்கள் உண்டாக்கிவிட்டனர். நமது போராட்டம் இனிமேல்தான் முழுவேகத்துடன் நடக்கவேண்டியிருக்கிறது. அந்த வேகம் பெரியார் இராமசாமி அவர்களையும், அவர்தம் தோழரும் தமிழ்த்தந்தையுமான திரு. வி. க. அவர்களையும் சிறைப்படுத்தி, அடுத்தடுத்த அறைகளில வைக்கவேண்டிய நாள் சமீபித்துவிட்டது.

இருபெரியார்களின் கூட்டுறவாலும், தோழர்களின் ஒத்துழைப்பாலும், இந்தி எதிர்ப்புப்போர் வெற்றி பெறும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

"யார் எதிர்த்தாலும், எவர் தடுத்தாலும், எந்த அதிகாரம் அடக்கி ஆண்டாலும் சரி, திராவிடநாடு கிடைத்தேதீரும் என்பதை வலியுறுத்திக்கூறுகிறேன்" என்று தலைவர் திரு. வி. க. அவர்கள் அன்று புலவர்கள் மாநாட்டில் கூறிய சூளுரையின் உட்கருத்தை ஊன்றிக்கவனிக்கும் எந்தத் திராவிடரும் திரு. வி. க. அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

✲

16-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கும் — ஆச்சாரியார் கவர்னர் ஜெனரல்—பெரியார், கைதி! அவர் பவனி! இவர் சிறைவாசம்!!

ஆச்சாரியாருக்கு மகத்தான உபசாரம் செய்வதாக எண்ணிக்கொண்டு, மந்திரிமார் செய்த இந்த ஏற்பாடு, மானமுள்ள தமிழனின் நெஞ்சிலே இடம்பெறும் மகத்தான ஓர் பாடத்தைத் தந்துவிட்டது.

ஆச்சாரியார் வந்தார்— பெரியார் சிறைப்பட்டார்.

ஆச்சாரியார் வந்தார்— கழகத்தினர் நூறுபேருக்குக் கைதாயினர்.

ஆச்சாரியார் வந்தார்—தமிழருக்குத் தடியடி கிடைத்தது.

ஆச்சாரியார் வந்தார் — தமிழ் இளைஞர் சிலருக்கு அடி கிடைத்தது, இரத்தம் பீறிட்டது.

இப்படித் தானே இருக்கிறது, சேதி!

புசு புசு வென்று இயக்கம் போய் விடுமாமே!

குபுகுபுவென இரத்தம் ஒழுகுகிறது, தடியடி பட்டவர் மண்டையிலே!! தமிழர்கள் கண்டனர்!!—வரலாற்றில இது இடம் பெறும்.

வரலாற்றில் இடம் பெறும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பதையே முக்கியநோக்கமாக, முதல் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். திராவிடர் கழகத்தின் நோக்கம் வேறு—எனவே முறையும் வேறாக இருக்கிறது.

கைது செய்வதானால், தாராளமாகச்செய்யட்டும் — ஆனால் கைது செய்யாதிருப்பின், மறியல் காரியத்தை ஒழுங்காக மேலும் மேலும் செய்வோம் என்பதே, திராவிடர் கழகத்தின் முறை. அந்தமுறையின் பலனை, உணரச்சர்க்காருக்குச் சில நாள் பிடித்தது—ஆனால் இன்னமும் முழுவதும் உணர்ந்துவிட்டதென்று கூறிடமுடியாது. பதவிப் பித்தம் புலன்களைக் கெடுக்கிறது— நல்லவர்களைக்கூட!!

முதல்நாள் மறியலின்போது, நடவடிக்கையைமட்டும் எதிர்பார்த்துக் கூடினர், பிறகோ, மக்கள், பிரச்னையைக்கவனிக்கக் கூடினர் — பிறகு ஆதரவாளர்களாக மாறினர். முதல் நாள் மாணவர்கள், தமது பள்ளி வாயலில் சிலபலர் கைது செய்யப் படுவார்கள், என்ற எண்ணத்துடன் வந்தனர். பிறகோ, மறியலின் போக்கையும் பாடத்தையும் கவனிக்கலாயினர்—அவர்களும் ஆதரவாளராயினர், புசு புசுவென்று போய்விடும் இந்த இயக்கம் என்றுகூறிய அமைச்சர், இவைகளைக் கண்டாரா? அவர் ஏதோ ஓர் கற்பனை உலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார் — நாட்டுமக்களின் உள்ளம் என்னென்ன விதமாக மாறுகிறதுஎன்பதைக்கவனிக்க முடியவில்லை!

ஆனால் அமைச்சர்களின் சிந்தனைக்கு வேலை தரும் விதமாகப் போலீஸ் நண்பர்களின் 'சேதிகள்' குவியலாயின.

* * *

மறியல் நடந்தா?

ஆமாம்—நடந்தது!

இன்றுகூட?

ஆமாம்—இன்றும்.

தொண்டர் தொகை?

வழக்கம்போல!

எவ்வளவு நேரம் நடந்தது?

இன்று அரைமணிநேரம் அதிகம்.

மாணவர்கள் போக்கு எப்படி இருந்தது?

நாளுக்குநாள் மாறுகிறது.

விளக்கமாகச் சொல்லுமய்யா. என்னமாறுதல்!

மாணவர்கள், இந்தி எதிர்ப்பாளர்களாகின்றனர்!

ஏன்?

மறியல் பலிக்கிறது என்று எண்ணுகிறேன்.

எப்படித் தெரிகிறது?

மாணவர்கள் பள்ளிக்கு வரும் போதே இந்தி ஒழிக என்று முழக்கமிட்டுக்கொண்டுவருகிறார்கள்.

அதேபள்ளிக்கூட மாணவர்களா?

ஆமாம்.

அந்த ஆசிரியர்கள் என்னசெய்துகொண்டிருக்கிறார்கள்?

பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் — வெளியே. பள்ளிக்கூடத்துக்கு உள்ளே, கண்டிக்கிறார்கள்.

வேறு என்ன செய்கிறார்கள்?

மாணவர்களா?

ஆமாம், அவர்கள்தான்.

மறியல்காரர்கள், இந்தி வகுப்புக்குப்போகாதே தம்பி என்று கூறும் போது, புன்னகை செய்கிறார்கள், வணக்கம் செய்கிறார்கள் — இந்தி வகுப்புக்குப் போவதில்லை என்று கூறுகிறார்கள்—மறியல் தொண்டர்களுக்கு மாலை சூட்டுகிறார்கள்.

யார் மாணவர்களா?

ஆமாம்—மாணவர்கள்தான்.

சரி—பிறகு?

இந்திப் புத்தகத்தைக் கொளுத்துகிறார்கள்.

மறியல்காரர்களா?

இல்லை!—மாணவர்கள்!

மாணவர்கள் கதை போதும்—ஜனங்கள்?

வழக்கம்போலவே கூடுகிறார்கள்—நாங்கள் நெடுந்தொலைவிலேயே தடுத்து நிறுத்திவிடுகிறோம்.

நீங்கள் தடுத்ததும், ஜனங்கள் திரும்பிப்போய்விடுகிறார்கள்?

அதுதானே இல்லை! மறியல்காரர்கள், ஜனங்களின் கண்களுக்குக்கூடத்தெரிவதில்லை—என்றாலும கூட்டமோ கலைவதில்லை.

நின்றுகொண்டே இருக்கிறார்கள்!

ஆமாம்—நின்றுகொண்டு பேசிக்கொண்டு,—இருக்கிறார்கள்.

என்ன பேசிக்கொள்கிறார்கள்?

அதை எல்லாம் நான் எப்படிச் சொல்வது?

பரவாயில்லை — சொல்லு-என்ன பேசுகிறார்கள்.

சர்க்காரின் போக்கைப் பலமாகக் கண்டிக்கிறார்கள்—நான் நாசுக்காகச் சொன்னேன்.

பார்ப்பனர்களைக்கண்டபடி ஏசுவார்கள்—பயல்களுக்கு அதுதானே பழக்கம்.

இல்லையே! ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை, அதுபோல.

என்னய்யா இது வேடிக்கை! உச்சிக்குடுமி ஒழிக, பூணூல் ஒழிக என்றெல்லாம் கூவுவார்களே.

கிடையவே கிடையாது — இந்தி ஒழிக—வடநாட்டான் ஒழிக, இவ்வளவுதான்.

அப்படியா?

ஆமாம் — பொதுமக்கள் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் பிரச்னை அல்ல இது—இது வடநாட்டான் தென்னாட்டான்பிரச்னை,என்றுபேசுகிறார்கள். மறியல்காரர்கள் இந்தி ஒழிக என்றுதான் கூறுகிறார்கள்—பொதுமக்களோ, வடநாட்டு ஆதிக்கம் பரவியிருப்பது அதனாலேதென்னாடு கெடுவது, பிர்லா, பஜாஜ், டாட்டா, டால்மியா ஆகியவர்களின் ஆதிக்கம், அவர்களுக்குப் படேலின் பக்கபலம் இருப்பது, என்ற இப்படிப்பட்டவிஷயங்களைப்பேசிக்கொள்கிறார்கள்.

எப்போது பேசுகிறார்கள்?

மறியல் நடக்கும்போது.

சரி................

தொண்டர்களைக் கைது செய்யலாமோ?

வேண்டாம் பார்ப்போம்—

* * *

ஓமாந்தூராருக்கும் உயர்தரப் போலீஸ் அதிகாரிக்கும், இதுபோலத்தானேஉரையாடல்,டெலிபோன் மூலமோ, நேரடியாகவோ நடைபெற்றிருக்க வேண்டும். என்ன 'பாடம்'தரும், இந்த உரையாடல்? இயக்கம், புசு புசுவென்று போவ

தையா!! மந்தமதியினரும் உணரு வார்களே, இந்தி எதிர்ப்பாளர்கள், கெண்டையை வீசி வராலை இழுக்கிறார்கள் என்பதை!!

மறியல் செய்தால் என்ன? மாணவர்களின் தொகை குறையவில்லை! —என்று மதியூக ஆசிரியர்கள் கூறக் கேட்டு, மந்திரிகள் மகிழ முடியுமா. மாணவர்கள் மனதில் மட்டுமல்ல, பொதுமக்கள் மனதிலேயும், வடநாட்டு ஆதிக்கத்தால் வரும் கேடுகள் பற்றிய விஷயம் நிறைந்த உண்மை இருக்கிறதே—அது நிறைய நிறைய, ஒழியப்போவது இந்திமட்டுமல்லவே, வடநாட்டு ஆதிக்கமல்லவா ஒழியப் போகிறது! இதுவா, புசபுச!

செச்சே! நாம்போட்ட கணக்குத் தவறு என்று அமைச்சர்கள் உணர்ந்து, ஏதேனும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும், என்று முடிவு செய்த நேரமும் ஆச்சாரியார் இங்கு வருகிற நேரமும், ஏறத்தாழ ஒன்றாக இருந்தது. எனவே, எந்த இயக்கத்தின் மீது இந்தக் கனம்களின் கண் விழாது என்று கூறினர்களோ, அந்த இயக்கத்தின், கமிட்டிக் கூட்டத்தை, போலீஸ் சுற்றி வளைத்துக் கொள்ளவேண்டிய அளவுக்கு ஜுர வேகம் ஏற்பட்டது, ஆளவந்தார்களின் போக்கிலே.

பொதுமக்களின் ஆதரவு இந்தி எதிர்ப்பின் காரணமாக உருவாகி இருப்பதையும்,

மறியல் தொண்டர்களின் சாந்தமும் அன்பும் கொண்ட முறை, பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்றுவிட்டதையும்,

மாணவர்களின் மனம் இந்தி எதிர்ப்பாளர்களின் சார்பாகத் திரும்பி இருப்பதையும்,

பார்ப்பனத்துவேஷம், ஆபாசக் கூச்சல், போன்றவைகள் தலைகாட்டாததால் இயக்கம் கண்ணியம் நிரம்பியதாகி வளருவதையும்,

இந்தி எதிர்ப்புப் பிரசாரத்தின் விளைவாக, வடநாட்டு ஆதிக்க நோக்கத்தைப் பொதுமக்கள் உணர்ந்து, வடநாட்டு ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி கொண்டு வருவதையும், அலட்சியத்தால் ஏளனத்தால், இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சாகடித்து விடலாம் என்று எண்ணிய அமைச்சர்குழு கண்டறிந்தனர்—அதேபோது இங்கு ஆச்சாரியார்—வெறும் ஆச்சாரியார் என்ற முறையிலே அல்ல—கவர்னர் ஜெனரல் என்ற முறையிலே வருவதாகச் சேதி கிடைத்தது—உண்மையிலேயே, உறக்கமிழந்தவராயினர்—பொதுமக்களின் போக்கு, எப்படி இருக்குமோ, இந்தி எதிர்ப்பாளர்களின் திட்டம் எப்படி எப்படி விரிவடையுமோ, என்றெல்லாம் அஞ்சத் தொடங்கினர்.

கண்மூடி மௌனியாக இருந்தவர்கள், கை கால்களை உதறிக்கொண்டு கண்டபடி பேசவும், கண்டபடி உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் முனைந்தனர்.

கைது செய்

யாரை?

எல்லோரையும்!

யாராரை?

எல்லோரையும்!

தொண்டர்களையா?

அகப்படுகிற அத்தனைபேரையும் கைது செய்—விடாதே—ஓடு—கமிட்டி கூடுகிறது தலைவர் வீட்டில்—சென்று வளைத்துக்கொள்—அனைவரையும் கைது செய்—

என்ன குற்றத்துக்காக?

குற்றமாவது குறையாவது—கும்பலாகக் கூடுகிறார்கள்—அப்படியே இழுத்துக் கொண்டுபோய், கூண்டில் போடு—சீக்கிரம்—உடனே—வேகமாக.

இப்படித் துரித காலத்தில் அமைச்சரின் அடாணை அமையலாயிற்று.

அமைச்சர்களின் அச்சத்துக்குப் பல காரணங்கள்—சில விசித்திரமானவை.

ஆச்சாரியார் பவனி வருகிறார்—கவர்னர் ஜெனரல் என்ற அந்தஸ்துடன், இந்திஎதிர்ப்புக்காரர்கள், தங்கள் அதிருப்தியைக்காட்டக்கருப்புக் கொடி பிடிக்க இருக்கிறார்கள்—பொதுமக்களோ, வடநாட்டு ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி கொண்டிருப்பதால், கருப்புக்கொடி காட்டுவது மிக மிக வெற்றிகரமாக இருக்கும்—இதைக் கண்டால், ஆச்சாரியார் என்ன எண்ணுவார்—என்ன சொல்லுவார்—என்ன செய்வார்—என்பதுபற்றி எண்ணினர்—எண்ணும்போது ஏற்பட்ட அச்சம் இவ்வளவு அவ்வளவு அல்ல.

ஏன்? கவர்னர் ஜெனரலின் கண்களிலே கருப்புக் கொடி தென்படக் கூடாது, என்பதல்ல அவர்களின் எண்ணம். கருப்புக் கொடி தெரிந்தால், அவர், தங்களைப்பற்றி என்ன எண்ணிக் கொள்வாரோ, என்ற கிலியே அதிகம். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமல்லவா! இன்றைய அமைச்சர்கள், ஆச்சாரியாரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்—அவரை ஆகஸ்ட்டுத்துரோகியென்று தூற்றியவர்கள்—நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்தியவர்கள்—ஆச்சாரியாரின் வகுப்பு வாத உணர்ச்சியை, நாடறியச் செய்தவர்கள்—அவர் இந்த மாகாணத்தில் எந்தவகையான ஆதிக்கமும் பெறக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்தவர்கள்—திருப்பரங்குன்றக்கலகமும், பல இடங்களிலும் நடைபெற்ற கூட்டங்களும், ஆச்சாரியாரின் செல்வாக்கைச் சிதைக்க நடத்தப்பட்டவைகள். அவைகளில் நடுநாயகங்களாக இருந்தவர்கள்—ஆச்சாரியார் தமிழ்நாடு காங்கிரசில் தலைமை வகிப்பது கூடாது என்று தடுத்தவர்கள்—அப்படிப்பட்டவர்களைப் பெரிதும் கொண்டது அமைச்சர் சபையை ஆக்கிவைத்ததமிழ்நாட்டுக் காங்கிரஸ். அதன் தலைவர் காமராஜர், கடும்புயல் வேகத்தில தமிழகத்தைச் சுற்றினர் ஆச்சாரியாரைத் தொலைக்க. கல்கி, உருவைப் பெரிதாக்கிக் கொண்டு, வார்த்தைகளை அனலாக்கிக் கொண்டும், ஆச்சாரியாரின் சார்பிலே நின்று போராடிப் பார்த்தது. அப்போது ஆச்சாரியாரைக் கண்டிக்க, இவர்கள் உபயோகித்த கடுமையான, சூடான, காரசாரமான, கேவலமான சொற்களை இப்போது கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடுக்கம் ஏற்படும்.

இவர் மண்டைக் கர்வி!

சுய ஜாதி அபிமானமுள்ளவர்!

சூழ்ச்சிக்காரர்!

காந்தியாரின் சம்பந்தியாகிவிட்டதால். எதையும்சாதிக்கலாம் என்று எண்ணுபவர்

பாகிஸ்தானுக்குத் தாளம் போட்டவர்.

ஆகஸ்ட்டில் காட்டிக் கொடுத்தவர்.

மேலிடத்துக்குக் காவடி தூக்குபவர்.

இவ்விதமாகவெல்லாம் பொதுக் கூட்டங்களில் பேசி, பத்திரிகைகளில் எழுதி, ஆச்சாரியாரின் வாழ்நாட்களிலேயே, அவர் மறக்க முடியாத வேதனையை உண்டாக்கின

வர்கள்—அவருடைய வீழ்ச்சியைத் திருநாளாகக் கொண்டாடியவர்கள்—அந்தக் கிளர்ச்சியின் போது, நாடு நகரமெங்கும் காங்கிரசுக்குள்ளாகவே இரண்டு கட்சிகளாகி, சொல்லடியும் கல்லடியும் மிகுந்திட, கோரமான நிலைமையை உண்டாக்கியவர்கள். அப்படிப்பட்ட தலைவர்களே, இன்று தமிழ்நாட்டுக் காங்கிரசின் முக்கியத் தலைவர்களாகவும், ஆட்சி மன்றத்தினராகவும், கொலு வீற்றிருக்கிறார்கள்.

"சிறை சென்ற தேசபக்தர்களை, உண்மை ஊழியர்களை, சிறந்த தியாகிகளை, அவமதித்தார்; அவர்களை ஐந்தாம் படையினர், சோம்பேறிகள், ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று நிந்திக்கவும் துணிந்தார்! அதற்கு வாயும் வந்தது! அதுமட்டுமா? தமிழ்நாட்டிலே எத்தனை குட்டிக் குழப்பங்களையும் கட்சிகளையும் சிருஷ்டித்தார்! அவர் அன்றுபோட்ட விஷவித்து, இன்று வளர்ந்து, பூத்துக்காய்த்து விஷக்கனிகளையும் கொடுத்து வருகிறது! இன்று தமிழ்நாட்டின் சீரழிவுக்கும், சீர்கேட்டுக்கும் அந்த விஷவித்துத்தான் காரணம் என்பதை யாராவது மறுக்க முடியுமா? தமிழ்நாட்டில் மட்டுமா இந்த விஷமம் செய்தார்? இல்லை; இல்லை. இந்தியாவெங்கும் பேய் விஷமப்பிரசாரஞ் செய்தார்! காங்கிரசையும், மகாத்மா காந்தியையும் கூட எதிர்த்தார்! ஆகஸ்ட் தீர்மானத்தைக் கிண்டல் செய்தார்! புரட்சியை ஒடுக்க முனைந்தார்! அட கடவுளே அத்துடன் நின்றாரா? ஜின்னா சாய்பவைத் தட்டிக் கொடுத்துப் பாகிஸ்தானுக்கும் தூபம் போட்டார்! அதற்கு வழியும் வகுத்துக் கொடுத்தார்! இதன் காரணமாக காங்கிரசிலுள்ள 4 அணா மெம்பர் பதவியைத் தவிர, எல்லாப் பதவிகளையும் ராஜிநாமாச் செய்தார். அவர் போன போக்கும், அவருக்கு நாடெங்கும் ஏற்பட்ட எதிர்ப்பையும் கண்ட மக்கள் அவருக்கு இனிமேல் அரசியலில் இடமே இருக்காது. அவர் அரசியல் துறவறம் பூண்டு, திருச்செங்கோடு ஆசிரமத்திலே முக்காடு போட்டுக் குந்திவிடுவார் என்றே நினைத்தார்கள்! தமிழ் நாட்டிலே, தமிழ் மக்கள் எல்லோரும் அவரை வெறுத்தார்கள்; அவர் தலைமையே வேண்டாமென உதறித் தள்ளினார்கள்!"

ஆச்சாரியாரைப் பற்றிய இந்த அர்ச்சனை—முன்பு அவர் மீது பொழியப்பட்டதிலே, ஆயிரத்திலே ஒரு பங்குதான் என்ற போதிலும், இந்த அர்ச்சனையில் ஒரு விசேஷம் இருக்கிறது—இது வெளிவந்திருப்பது "தமிழ்மணி"யில். அதாவது இந்தி எதிர்ப்புக்கு ஆதரவளிக்காத ஏட்டில். வெளிவந்திருக்கும் தேதி ஆகஸ்ட்டு 22ல்.

இப்படிப்பட்ட பல அர்ச்சனைகளை, 'தமிழ் மணி' அன்று போல் இன்றும் செய்கிறது, ஆச்சாரியார் விஷயத்தில் மட்டுமல்ல, தவறான பாதையில் செல்லும் எந்தக் காங்கிரஸ் தலைவருடைய விஷயத்திலும், இந்தப் போக்கிலே, கொண்ட கொள்கையின்படி நடப்பது என்ற நேர்மையைத் 'தமிழ்மணி' கடைப்பிடித்து, ஆச்சாரியாரைத் தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்தவர் என்று அன்றும் சொன்னேன் இன்றும் சொல்கிறேன் என்று வெளிப்படையாகக் கூறுகிறது. காமராஜர் உட்பட மற்றக் காங்கிரஸ் தலைவர்களுக்கோ, இந்த நேர்மையிலே அக்கறையில்லை முன்பு நாக்கில் நரம்பின்றி ஆச்சாரியாரைத் தூற்றினோமே, தமிழ் நாட்டுத் தலைமைப் பதவிக்கே அவர் லாயக்கற்றவர் என்று கூறி அவரை ஓட ஓட விரட்டினோமே, இப்போது ஆச்சாரியார் திருவடிகளே சரணம் என்று கூறினால், நாடு நகைக்காதா, நமது மனமே சுடாதா, எதிர்க் கட்சி கேலி செய்யாதா, ஆச்சாரியாரே கூட அலட்சியமாகப் பார்க்கமாட்டாரா, என்றெல்லாம் எண்ணவில்லை. இதேதடா பெரிய தொல்லை! நாட்டிலே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெறுகிறநேரத்தில், வடநாட்டு ஆதிக்கத்தை மக்கள் உணர்ந்து எதிர்க்கும் நேரத்தில், ஆச்சாரியார் வருகிறாரே—அவர் வருகிறபோது, கருப்புக்கொடி காட்டப் போகிறார்களாமே—காட்டினால், அவர் ஒரு சமயம், நம்மை ஆகஸ்ட்டுத் துரோகி என்று கேவலமாகப் பேசிய காமராஜ் கூட்டம் இப்படிக் கருப்புக் கொடி வைபவம் நடத்தட்டும், நாமும் கண்குளிரப் பார்ப்போம், என்று தூபமிட்டு, மறைமுகமாக ஆதரித்து விட்டார்கள் போலும், என்று ஆச்சாரியார் எண்ணிக் கொண்டால் என்ன செய்வது? அவரோ இப்போது கவர்னர் ஜெனரல், இருக்கும் இடமோ, டில்லி—டில்லியோ நமது அரசியல் வாழ்வை நிர்ணயிக்கும் இடம்—அப்படி இருக்கும்போது, அவர் மனம் குளிர்ந்தால்தானே நமது அரசியல் ஆயுள் வளரும், என்று யோசித்து, இந்தக் கருப்புக் கொடிச் சம்பவத்தை நாம் ஏனோ தானோ என்று விட்டுவிட்டதாக ஆச்சாரியார் எண்ணிவிடக் கூடாது—ஏதாவது செய்து, அவர் மனதில் நம்மைப்பற்றிச் சந்தேகமோ, தப்பு எண்ணமோ உண்டாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்; நமது அரசியல் வாழ்வுக்குப் பெருத்த சோதனை காலம் இது—என்று அஞ்சி, அவசர அவசரமாக யோசித்து, ஒரு முடிவு செய்ய வேண்டியதாயிற்று—பெரியாரையும் அவருடன் உரையாடிக்கொண்டிருந்தோர் அனைவரையும் சிறையிலிட்டு விட்டு, ஆச்சாரியாரைப் பேட்டி காண்பதுதான், பெருநெறி என்று, அந்தப் பெரிய மனிதர்கள் முடிவு செய்தனர்—தமது முன்னாள் சிறுமைக் குணத்தை மறைக்க, இந்த அடக்குமுறைப் படுதா தேவைப்பட்டது.

கவர்னர் ஜெனரலுக்குக் கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டவர்களை முன்கூட்டிக் கைது செய்து, பாதுகாப்பான நடவடிக்கை எடுத்து, கவர்னர் ஜெனரலின் பவனிக்குச் சீரும் சிறப்பும் ஏற்படும்படியான, ஒழுங்கான நிர்வாகத்தையும் செய்ய முடியாத ஒரு மந்திரி சபை, சென்னை மாகாணத்தில் இருக்கிறது—என்று கவர்னர் ஜெனரல் கூறிவிட்டால் என்ன செய்வது?

என்னிடம் வெறுப்பும் துவேஷமும் கொண்டு, தமிழ் நாட்டில் பிரசாரம் செய்துவந்த காமராஜர்தான், இப்போதும் தமிழ் நாடு காங்கிரசின் தலைவர்—அவருடைய ஆதரவைப் பெற்றதுதான், மந்திரி சபை, அந்த மந்திரி சபையின் மாண்பை நான் கூறத் தேவையில்லை. எனக்குக் கருப்புக் கொடி காட்டினார்கள்—அதிலே காமராஜ் என்று எழுதப்படவில்லை ஆனால், என் மனக்கண்ணால் அந்தப் பெயரைக் கண்டேன் என்று கூறிவிட்டால், என்ன செய்வது, என்ற கிலி பிடித்தாட்டிற்று. ஆச்சாரியருடைய உயர்ந்த பதவி, இவர்கள் மனதிலே, அவரிடம் ஆசையை அல்ல, அச்சத்தை—மதிப்பை அல்ல மருட்சியை, உண்டாக்கிற்று. இதனாலேதான், தங்கள்

பத்தினித்தனத்தைக் காட்டிக்கொள்ள வெகு பாடுபட்டார்கள்— பெரியாரையும் கழகத் தோழர்கள் பலரையும், சிறையில் தள்ளிவிட்டு, ஆச்சாரியாரைக் காணச் சென்றார்கள். ஐயனே! எம்மைப் பற்றிச் சந்தேகிக்காதீர்.

ஆச்சாரியாரே! முன்பு நாங்கள் தூற்றியதை மனதில் கொள்ளாதீர்!

கவர்னர் ஜெனரலே! உமது கருணை எமக்குத் தேவை. திராவிடர் கழகத் தலைவரையும் மற்றும் பலரையும் சிறைப்படுத்திவிட்டோம், உமக்குக் கருப்புக்கொடி பிடிக்க ஏற்பாடு செய்தார்கள் என்று தெரிந்ததும்.

உமக்குக் கருப்புக்கொடி பிடிக்க ஒருவர் எண்ணுவது தெரிந்தும் எங்கள் உள்ளம பதறாதா—அந்த உலுத்தர்களைச் சும்மா விடுவோமா!—

என்றெல்லாம், அவர்களின் பார்வை, பேச, அவர்களை: நோக்கி ஆச்சாரியார், "கருப்புக்கொடி பிடிப்பவர்கள், கபடமறியாதவர்கள்— கண்ணியமாகத் தங்கள் அதிருப்தியைக் காட்டுகிறார்கள், உங்களைப் போல உதட்டில் உபசாரமும் உள்ளத்தில துவேஷமும் கொண்டவர்களல்ல.

அவர்கள், என்னை, என் சொந்தக் குணக் கேட்டுக்காகவோ, நடவடிக்கைக்காகவோ, வெறுப்பதாகக் கூற வில்லை—நான் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்காமலிருக்கிறேன்— ஏற்றுக் கொள்ளுகிறேன்—என்பதற்காகவே குறை கூறிக் கருப்புக் கொடி காட்டுகிறார்கள்— நீங்களோ நான் டில்லி தேவனாவதற்கு முன்பு, என் யோக்யதையைச் சந்தேகித்தீர்கள், என் அறிவைக் கேலி செய்தீர்கள், என் திறமையைச் சூழ்ச்சி என்றீர்கள், என் தியாகத்தை வேஷம் என்றீர்கள், என்னைப் படாத பாடு படுத்தினீர்கள்— நீங்கள் என்னிடம் பேசுகிறீர்கள் அன்பொழுக! நான் அனுபவசாலி! அந்தக் கருப்புக் கொடியினரின் போக்கையும் அறிவேன்—உங்கள் மலர் மாலையின் இலக்ஷியத்தையும் அறிவேன். நீங்கள் பதவிக்குப் பயந்து பல்லிளிக்கிறீர்கள்— அவர்கள், ஒரு கொள்கை காரணமாகக் கருப்புக்கொடி காட்டுகிறார்கள். அவர்களிடம் நான் நாணயத்தைக் காண்கிறேன்— உங்களிடம் நடுக்கத்தைக் காண்கிறேன். நீங்கள், திடீரென்று தயாரிக்கப்பட்ட அன்பைக் கக்குவது தெரிகிறது— அவர்களோ, ஓர் போர் முழக்கமிடுகிறார்கள். என்னால் சாத்யப்படுமானால் நான் அவர்களோடு இருக்கமுயல்வேன்— உங்களோடு அல்ல— என்று ஆச்சாரியார் பேசமுடியாது —ஆனால் பார்வை காட்டியிருக்கும் இந்தக் கருத்துக்களை.

சந்தேகத்துக்கு ஆளாகி விட்டால் என்ன செய்வது என்ற சஞ்சலம் கொண்ட தலைவர்கள், மின்னல் வேகத்தில் பாய்ந்து, திராவிடர் கழகத்தின் முக்யஸ்தர்களை எல்லாம் சிறைப்படுத்தினர்— கருப்புக்கொடி அவர்களிடமா இருந்தது, மறைந்து விட— அது பறந்தது, ஆச்சாரியார் கண் முன்!!

வருகிறார் ஆச்சாரியார் என்று, மகிழ்ந்து (மேலுக்காவது) காலையில் எழுந்து நீராடி விட்டு, காங்கிரஸ் தலைவர்கள் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்த அன்று, திராவிடர் கழகத் தோழர்கள், சிறையிலே சோளக் கஞ்சியைக் குடித்துக் கொண்டிருந்தனர்— சோளக்கஞ்சி! சிறை வாசம்! யாராருக்கு! கோவில்பட்டி நகராட்சி மன்றத் தலைவர் கையில் சோளக்கஞ்சிக் கலயம்—ஒத்தைக் கொட்டடி வாசம்— 151வது செக்ஷன்! வாணியம்பாடி நகரசபைத் துணைத் தலைவருக்கு அதே கதி! ஈரோடு நகரசபை உறுப்பினருக்கு அதே நிலை! மிட்டா மிராசு பாத்யதை உடையவர்கள், வியாபார வளம் உள்ளவர்கள், சமுதாயத்தில உயர் நிலையில் வாழ்பவர்கள் பலருக்கும், C. வகுப்பு!! அவர்களைக் காண, காங்கிரஸ் M. L. A. ஒருவர் வந்து கூடப் போனார். அவருடைய கண்களிலே நீர் சொரிந்தத் ?—நானறியேன். என்ன எண்ணியிருப்பர்,

உள்ளே சென்றிருந்தவர்களல்ல— வெளியே இருந்த மக்கள்— ஆச்சாரியாரைக் கண்டவர்கள்—வரவேற்பு நடத்தினவர்கள் — வைஷ்ணவ ஜனதோ பாடினவர்கள்— நடன விருந்து அளித்தவர்கள்—நாடாளும் நண்பர்கள்.

ஆச்சாரியார் வந்தார்—சிறையில் பெரியார் தள்ளப்பட்ட பிறகு!

ஆச்சாரியாரும பெரியாரும், அடுத்தடுத்த இடம்—முன்னவர், சேலம், பின்னவர், ஈரோடு—இருவரும் தத்தமது ஊர்களில், நகர சபைத் தலைவர்கள்—இருவருக்கும் நல்ல வருவாய், வக்கீல் வேலை ஆச்சாரியாருக்கு. வியாபாரம் பெரியாருக்கு. இருவரும் காங்கிரசில் சேர்ந்து பணியாற்றினர்—ஏறத்தாழ ஒத்த வயதினர்—ஒருவர் கவர்னர் ஜெனரலாகப் பவனி வருகிறார்—மற்றவர் சிறையிலே கைதி!! விமான நிலையத்திலே ஆச்சாரியார் வந்து இறங்க, அவரைக் கவர்னர் தம்பதிகள் வரவேற்க, ஆச்சாரியார் அங்கு வந்தவர்களைப் பார்வையிடுகிறார்— இங்கே சிறையில், மற்றக் கைதிகளுடன் பெரியார் நிற்கிறார், ஜெயில் சூப்ரின்டெண்டு, கைதிகளைப் பார்வையிடுகிறார்!

வெளியே ஆச்சாரியாருக்கு, வெள்ளித் தாம்பாளம், வட்டில், அவைகளிலே, விசேஷ பட்சணங்கள்!

உள்ளே பெரியார் முன்பு அலுமினியத் தட்டும், அதிலே அவர் உடலுக்கு ஒவ்வாத காரமுள்ள குழம்பு கலந்த சோறு.

பொதுவாழ்க்கையின் பலனாக, ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாகி அன்று பவனி வருகிறார்.

பொதுத் தொண்டின் பலனாகப் பெரியார் அன்று சிறையில், வேப்பமரத்து அடியில், உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

ஆனால், அவர் முகத்தில் புன்னகை தவழுகிறது — அந்த வெண்தாடி அசைவைக் கண்டு, அவருடைய கூட்டுத் தோழர்களின் உள்ளத்தில் உவகை கூத்தாடுகிறது—அதே போது கவர்னர் ஜெனரல் எதிரே கருப்புக்கொடிகள் பறக்கின்றன— கடுகடுப்பை மாற்ற அவர் புன்னகையை அழைக்கிறார்—அது சிறையில் இருக்கிறது—ஸ்டேடியம் வர மறுக்கிறது!!

இவைகளை அன்று யார் எண்ணாமலிருந்திருக்க முடியும்—எண்ணினவர்கள் யார், தமது ஆயுட்காலத்தில் இதனை மறந்திட முடியும்! எதிர்காலத்திலும், இந்தச் சம்பவத்தைப், படிக்கும் எந்த இளைஞனின், புருவம்தான் நெறித்திடாதிருக்கும்— யாருக்குத்தான் பெருமூச்சு வராதி

(12-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Puplished by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.